
ஸ்ரீமத்
வாயு புராணம்
Y. Tharjini
– கே.வி. குணசேகரம் –

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சன்னிதானம்
ஸ்ரீ லஸ்ரீ சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 232021

நாள்: 7.7.2010

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

## அருள் வாழ்த்துரை

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

.... - அப்பர் தேவாரம்.

இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே. வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும், மாயை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான தத்துவங்களைப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து துணிய வேண்டிய செய்திகளும் உள்ளன.

இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இணைப்பு: திருநீற்றுச்செல்வம்.

பெறுநர்: திரு. கே. வி. குணசேகரம் அவர்கள்,
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
ஸ்ரீலங்கா.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை



## என்னுரை

**ப**தினெண் புராணங்களில் ஒன்றாக வாயு புராணம் அந்நாளில் இருக்கவில்லை. இப்போது அது சேர்க்கப்பட்டுள்ளது. அது சேர்க்கப்பட்டதால் புராணங்களின் எண்ணிக்கை பத்தொன்பதாக உயர்ந்தபோதும், நடைமுறையில் பதிணென்புராணங்களென்றே கூறப்பட்டு வருகிறது.

**இ**ந்தப் பத்தொன்பது புராணங்களையும் எழுதி முடித்து இணையத்தில் சேர்த்த பின்பு ஒரு மகிழ்ச்சி, நிம்மதி தோன்றியுள்ளது. நான் எழுதுவது விருதுகளுக்கோ, பாராட்டுக்களுக்கோ அல்லது புகழ்ச்சிக்கோ அல்ல. முற்பிறப்பில் இடப்பட்ட பணியென்று நினைக்கிறேன். ஏனென்றால் நான் எழுதியவை சுமார் பல ஆயிரம் வருடங்களாக யாரும் எழுதாதவையாகும். மூல நூல்களான திருமந்திரம், திருக்குறள், திருவாசகம், திருவருட்பயன், பழந்தமிழ் நூல்கள் போன்றவற்றிற்கு இதுவரை உரை எழுதப்பட்டதே தவிரக் கதைகள் எழுதப்படவில்லை.

**சி**றுவர்களுக்குத் தத்துவங்களை உபதேசிப்பதனால் கதைகள் மூலம் தான் உபதேசிக்க வேண்டும். ஐந்து வயதுப் பாலகனும் ஆர்வத்துடன் கதை கேட்பான். அதை விளங்கியும் கொள்வான். அதனால்தான் இந்து தத்துவங்களைக் கதைகளாக்கியுள்ளேன். இவற்றை விமர்சிப்பாரில்லை. அக்கினி புராணத்தில் பல நகரலோகங்கள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதில் ஒரு நரகலோகம் யாழ்ப்பாணமாகும். பெரும் பாவங்களைச் செய்தவர்கள் தான் இங்கு பிறந்து துன்பப்படுகின்றனர். புண்ணியங்களைச் செய்தோர் தமது புண்ணிய பலன்களால் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். யாழ்ப்பாணம் ஒரு விசித்திரமான நரகலோகம். இந்த நரகலோகத்தில் பிறக்கக்கூடாது. அதிக பாவம் செய்தவர்கள் தான் இங்கு பிறந்து அழுந்துகின்றனர்.

**நா**ன் சுமார் இருநூறு நூல்களை எழுதியுள்ளேன். பகவத்கீதைக் கதைகள், திருவருட்பயன் கதைகள், மாயை பற்றிய தத்துவக் கதைகள் என்று பல நூல்களைப் பலருக்கு இலவசமாகக் கொடுத்தேன். ஒருவர் கூட விமர்சிக்கவில்லை. விமர்சனம் என்பதைப் பலரும் தவறாகக் கருத்திக் கொள்கின்றனர். விமர்சனம் என்பது சரி பிழைகளைக் கூறுதல். அப்படிக் கூறினால் அடுத்த பதிப்பில் அவற்றைத் திருத்தலாம். இதுதான் எனது எண்ணமே தவிரப் புகழோ, விருதோ தேவையில்லை. ஏனென்றால் திருவாவடுதுறை ஆதீனம் சிறந்த தத்துவ நூல்கள் என்று விமர்சித்த நூல்களையே யாழ்ப்பாணத்தார் கருத்தில் கொள்ளவில்லை.

**ஆ**யிரக்கணக்கான சிறுவர் கதைகள் எழுதியுள்ளேன். ஆயிரம் திருக்குறள்களுக்குக் தொலைக்காட்சியில் கதை கூறியுள்ளேன். இருந்தும் யாரும் இவற்றைக் கேட்டதாகத் தெரியவில்லை. கேட்டிருந்தால் விமர்சித்திருப்பர்.

**எ**னது செயற்பாடுகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காயின. பட்டதாரியான நான் தரம் ஒன்று அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவன். தரமில்லாத அதிபர்கள் உயர்தரப் பாடசாலைகளில் கடமையாற்ற நான் பதினைந்து வருடகாலம் ஒரு மூன்றாம்தரப் பாடசாலையில் கடமை செய்தேன். அப் பாடசாலை ஏனைய பாடசாலைகளை விட உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றது. இருந்தும் யாரும் கண்டுகொள்ளவில்லை. அதிகாரிகள் தமக்கும், தமது மனைவிமார்க்கும், இனத்தவர்களுக்கும் உயர்பதவிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தமையால் தான் யாழ்ப்பாணக் கல்வி கடைநிலையை அடைந்தது. கல்வி வீழ்ச்சிக்குக் காரணமானவர்கள் உயர்கல்வி அதிகாரிகளே.

**ச**மயத்தை வளர்ப்போம் என்று கூறுபவர்கள்கூடத் தமது சுயநலனுக்காகவே யாவற்றையும் செய்கின்றனர். அதனால் தான் யாழ்ப்பாணத்தையும் ஒரு நரகலோகமென்றேன். இங்கு நல்ல

செயல்களைச் செய்பவர்களுக்கு மதிப்பில்லை. விருதுமில்லை, பாராட்டு இல்லை. தமது சுயநலத்திற்காக எதையும் செய்து தமது எண்ணங்களை நிறைவு செய்பவர்கள் தான் இங்கு மகிழ்வுடன் வாழ்கின்றனர்.

**ப**திணென் புராணங்களின் பெயர்களே பலருக்குத் தெரியாது. அவற்றைச் சிறுவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே பல இலட்சரூபா செலவு செய்து எழுதிவருகிறேன். இவை விரைவில் நூலுருப்பெறும். அத்துடன் இணையத்தில் எனது ஆக்கங்களைப் பல இலட்சம் வாசகர்கள் படிக்கின்றனர். உலகில் உள்ள தமிழர்கள் எனது இணையத்தின் வாசகர்கள். அவர்கள் இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் எனது எழுத்துக்களை உணர்ந்து கொள்வர்.

**இ**ந்நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த யோகநாதன் தர்ஜினி (கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் பிறைவட் லிமிட்டட்) அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)




**என் பிரிய எழுத்தாளர் செங்கை ஆழியானுக்கு இப்புராண நூலைச் சமர்ப்பிக்கிறேன்**

**எ**ன் வாசிப்பு உலகில் தாயாக விளங்கிய பெருமதிப்புக்குரிய செங்கை ஆழியான் அவர்களது பிறந்த தினம் (ஜனவரி 25,1941) இன்றாகும்.

**ஒ**ரு தாய் தன் பிள்ளைக்குக் கெடுதல் தராத உணவைப் பார்த்துப் பார்த்துத் தன் கைப்பக்குவத்தில் சமைத்துக் கொடுத்தது போல செங்கை ஆழியானின் படைப்புகளைத் தேடி வாசித்த அவரின் தீவிர வாசகர்கள், அவரின் பன்முக எழுத்தாற்றலை ஈடு செய்யுமளவுக்கு இன்னொரு படைப்பாளியைக் காட்ட முடியாத வெறுமை நிலையை உணர்ந்து கொள்வர்.

**ஈ**ழத்து இலக்கிய உலகுக்கு மட்டுமன்றி ஒட்டு மொத்தத் தமிழ் இலக்கியப் பரப்பில் செங்கை ஆழியான் அளவுக்குப் பன்முகப்பட்ட களத்தில் இலக்கியம் சமைத்தோரை என்னால் இனம் காட்ட முடியவில்லை.

**த**மிழ் இலக்கிய வாசகப் பரப்பில் நட்சத்திர அந்தஸ்த்தைச் சம்பாதித்த எழுத்தாளர் பலர் இருக்கிறார்கள். ஆனால் செங்கை ஆழியான் அளவுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நில்லாது ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களைப் பகைப்புலமாகக் கொண்ட நடைமுறை வாழ்வியல் நாவல்கள், சிறுகதைகள், வரலாற்றை அடியொற்றிய படைப்புகள் என்று தன் எல்லாவிதமான எழுத்துகளையும் அபிமானம் பெற வைத்த நட்சத்திர எழுத்தாளர் அரிது.

**அ**ம்புலிமாமா, பாலமித்திரா போன்ற சிறுவர் புதினங்களில் இருந்து அடுத்த கட்டத்துக்கு என் வாசிப்பனுபவத்தை உயர்த்தி வைத்த செங்கை ஆழியானின் எழுத்துகள் அதையே அந்தமாக வைத்துக் கொள்ள உதவியது.

**எ**ன் பதினோராவது வயதில் எங்கள் அம்மம்மா வீட்டில எடுத்த ஈழநாடு வாரமலரைப்பிரித்து சிறுவர் பக்கத்தைத் தேடும் போது கண்ணில் பட்டது

"**கி**டுகு வேலி" என்ற தலைப்போடு செங்கை ஆழியான் எழுதிய தொடர்கதை. அந்த இதழில் தான் முதல் அத்தியாயம். அந்த நேரத்திற்கு எனக்கு எதைக் கிடைத்தாலும் வாசிக்கவேணும் என்ற வீறாப்பு இருந்ததால் மூச்சுவிடாம முதல் அத்தியாயத்தைப் படிச்சுமுடித்தேன்.

**அ**ட.. இவ்வளவு நாளும் நான் கண்டிராத ஒரு உலகுக்கு என்னை அழைத்துப் போகிறதே இந்த எழுத்து என்று அப்போது நினைத்துக் கொண்டேன்.

**ஈ**ழநாட்டில வந்த "கிடுகுவேலி" வாரந்தத்தொடர்ப்பக்கத்தைக் கத்தரித்து ஒரு சித்திரக்கொப்பி வாங்கி (பெரிய சைஸ் பேப்பரில இருக்கும்) கோதுமை மாப் பசை போட்டு ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு அத்தியாயமாக ஒட்டிக்கொள்வேன்.

**அ**ன்று தொடங்கியது தான், செங்கை ஆழியானின் கதைகளைத் தேடி எடுத்துப் படிக்க முடிவுசெய்துகொண்டேன்.

**நா**ன் கல்வி கற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி நூலகத்தில் செங்கைஆழியானின் நாவல்கள் இருக்கும் அலமாரியைக் குத்தகைக்கு எடுத்தது போல, அவரின் நாவல் ஒவ்வொன்றிலும் இருக்கும் வெளிவந்த நூல் பட்டியலைக் குறித்து வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாகப் படிக்க ஆரம்பித்தேன்.

**ஒ**ரு நாள் நூலகத்தின் புத்தகச்சுரங்கத்திலே எனக்குக் கிடத்தது ஒரு பழைய சிறுகதைத்தொகுதி. 1964 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில முதன் முதலில் தமிழ் மூலமான பட்டப்படிப்புக் கல்விக்கு தேர்வான மாணவர்குழு ஒன்று வெளியிட்ட "விண்ணும் மண்ணும்" என்ற சிறுகதைத்தொகுதி தான் அது. யோகேஸ்வரி, ராஜகோபால் (செம்பியன் செல்வன்), குணராசா (செங்கை ஆழியான்), செ.யோகநாதன் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் சிலர் தம் சிறுகதைகளைக் கொடுத்திருந்தார்கள்..பின்னாளில் அதில் எழுதிய அனைவருமே ஈழத்தின் இலக்கிய முன்னோடிகளாகத் தடம்பதிருந்தார்கள். நாவல் மூலம் எனக்கறியப்பட்ட செங்கை ஆழியான் நல்ல சிறுகதைகளையும் எழுதாமல் விடவில்லை என்பதையும் எனக்குக் காட்டிகொடுத்துவிட்டது அந்நூல்.

**இப்போது எனக்கு புதிதாக ஒரு பிரச்சனை.**

**செ**ங்கை ஆழியானின் நாவல்களை மட்டுமல்ல சிறுகதைகளையும் விடக்கூடாது எண்டு முடிவெடுத்துப் பள்ளிக்கூட நூலகத்தில இருந்த மல்லிகை போன்ற சஞ்சிகைகள் பக்கம் பாய்ந்தேன்.

**நூ**லகராக இருந்த தனபாலசிங்கம் மாஸ்டர் எனக்குப் பெரிதும் கை கொடுத்தார்.

"**பி**ரபாகர், மல்லிகை புதுசு வந்திருக்கு" என்று நூலக வாசலுக்கு வந்து எட்டிப்பார்த்துச் சொல்லிப்போட்டு ஏதோ ஒரு பெரிய கடமையை முடித்த திருப்தியில் போவார்.

**வீ**ரகேசரி பிரசுரம் வழியாக செங்கை ஆழியானின் மிக முக்கியமான நாவல்கள் எனக்குக் கல்லூரி நூலகத்தில் இருந்து கிடைத்தன. இருந்தாலும் அப்போது எனக்கிருந்த இலக்கு இவரின் எல்லாப் புததகங்களையும் படித்து முடிக்க வேணும் என்று. எப்படி இது சாத்தியம் என்று நான் நினைத்தபோது ஒருநாள் அதுவும் கைகூடியது இன்னொரு சந்தர்ப்பத்தில்.

**எ**ங்கள் வீட்டு அயலில் இர்ய்ந்த அண்ணா கோப்பி நிறுவனத்தில வேலை பார்த்துக் கொண்டிருந்த மேகநாதன் என்ற இளைஞன் புத்தகப் பிரியன். ஒரு முறை அவரின் புத்தகக் கட்டை எட்டிப் பார்த்த போது கிடைத்தது செங்கை ஆழியானின் " இரவின் முடிவு" என்ற நாவல்.

**மே**கநாதனிடம் ஒப்பந்த அடிப்படையில் அவர் வேலை செய்யும் நேரத்தில் நான் புத்தகத்தைப் படித்து விட்டுத் திரும்பக் கொடுப்பது என்ற உடன்படிக்கையில்

**எ**னது பாடசாலை மூன்றாம் தவணை விடுமுறை காலத்தில் அப்போது "இரவின் முடிவு" நாவலைப் படித்து முடித்தேன்.

**எ**ன்னுடைய நம்பகத்தன்மையைக் கண்ட மேகநாதன் தொடர்ந்து செங்கை ஆழியான் எழுதிய நாவல்களான பிரளயம், ஆச்சி பயணம் போகிறாள், காட்டாறு, யானை, ஓ அந்த அழகிய பழைய உலகம், கங்கைக்கரையோரம் , அக்கினிக்குஞ்சு என்று ஒவ்வொன்றாகத் தந்தார். சில நாட்களில் ஒரே மூச்சாக நான் முழு நாவலையும் படித்து முடித்துக் கொடுக்கும் போது வியப்பாகப் பார்ப்பான் அவன்.

**பூ**பாலசிங்கம், சிறீலங்கா புத்தகசாலை என்று ஒருகாலத்தில் அலைந்து செங்கை ஆழியானின் சிறுகதை, கதை, கட்டுரை எனத்தேடியெடுத்து வாசித்தேன், திரும்பத்திரும்பச் சிலவேளை.

**ஒ**ரு கட்டத்தில் அவரின் ஒரு சில கைக்கெட்டாத சில படைப்புக்கள் எனக்குக் கிடைக்காது, அவர் எழுதிய ”பூமியின் கதை” உட்பட புவியியல் வரலாற்றுப் படைப்புக்களைப் படித்தேன். வேறெந்த எழுத்தாளனின் படைப்பையும் தொட்டுப்பார்க்க விரும்பாத காலம் அது.

**Error! Filename not specified.**

**இ**ப்போது நினைத்துப் பார்த்தாலும் என்ற இந்தச் செய்கை எனக்கு உள்ளூர வியப்பாக இருந்தாலும், நான் எந்த உசாத்துணையும் இன்றி இன்றும் நினைவில் வைத்திருந்து எழுதக் கூடிய அளவுக்கு செங்கை ஆழியானின் நாவல்களின் பின்னணி வார்ப்பும், பாத்திரங்களும் அமைந்திருக்கின்றன.

**ஆ**ச்சி பயணம் போகிறாள் - யாழ்ப்பாணத்தில் தன் கிராமம் தாண்டாத ஒரு கிழவி கதிர்காமம் நோக்கிப்பயணிக்கிறாள். கிராமியம் கடந்த நகர வாழ்வியலும், புதிய உலகம் அவளுக்கு ஏற்படுத்தும் மன உணர்வுமே ஒரு நகைச்சுவை நாவலாக அமைந்திருக்கின்றது.

**யா**னை - ஈழத்துக்காட்டுப் பகுதியில் வெறிபிடித்த ஒரு யானையிடம் தன் காதலியை இழந்தவன் தன் வஞ்சம் தீர்க்கப் புறப்பட்ட கதை

**ஓ** அந்த அழகிய பழைய உலகம் - ஓய்வு பெற்ற ஒரு பொறியிலாளர் நகரவாழ்க்கையை வெறுத்துத் தன் கிராமத்திற்கு வரும் போது நாகரீகம் தன் கிராமத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தின்னும் கதைப்புலன்.

**வா**டைக்காற்று - நெடுந்தீவின் புவியியற்பின்னணியில் காதலும் மீனவரின் வாழ்வியலும் கலந்த கதை

**கி**டுகுவேலி - புலம் பெயர்ந்து வெளிநாட்டுக்குப் போகும் போது நம் கிடுகுவேலிப்பாரம்பரியம் சொந்த நாட்டில் எவ்வாறு சிதைகின்றது என்பதைக்காட்டுகின்றது.

Error! Filename not specified. முற்றத்து ஒற்றைப் பனை - சோளகக்காற்றில் காலம் காலமாகப் பட்டம் விட்ட, இன்னும் விட ஆசைப்படுகின்ற ஒரு முதியவரின் மனவியலைக் காட்டுகின்றது.

**ந**டந்தாய் வாழி வழுக்கியாறு - வழுக்கியாறுப் பிரதேசத்தில் தொலைந்த தம் மாட்டைத்தேடுபவர்களின் கதை.

**க**ங்கைக்கரையோரம் - பேராதனை வளாகச் சூழலில் மையம் கொள்ளும் காதல் கதை.

**கொ**த்தியின் காதல் - கொத்தி என்ற பெண் பேய்க்கும் சுடலைமாடன் என்ற ஆண் பேய்க்கும் வரும் காதல், சாதி வெறி பிடித்த எறிமாடன் என்ற இன்னொரு பேயால் கலைகிறது. எமது சமூகத்தில் சாதிப்பேய் எப்படித் தலைவிரித்தாடுகிறது என்பதைக்காட்டும் கதை. சிரித்திரனில் தொடராக வந்து மாணிக்கம் பிரசுரமாக வெளிவந்தது.

**க**டல்கோட்டை - ஒல்லாந்தர் காலத்தில் ஊர்காவற்துறை கடற்கோட்டையப் பின்புலமாக வைத்து எழுதப்பட்ட அருமையான வரலாற்று நவீனம்.

**தீ**ம் தரிகிட தித்தோம் - 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களம் சட்டம் கொண்டுவந்தபோது மலர்ந்த கற்பனைக்காதற் கதை. இதில் புதுமை என்னவென்றால் தனிச்சிங்களச்சட்டவிவாதம் நடந்தபோது எடுக்கப்பட்ட குறிப்புக்களும் விவாதமும் காட்டபட்டிருக்கும் களம் ஒரு பக்கம் போய்க்கொண்டிருக்க , இன்னொரு பக்கம் தமிழ்ப்பையனுக்கும் சிங்களபெண்ணுக்குமான காதற் களம் காட்டப்பட்டிருக்கும், நாவல் முடியும் போது இனக்கலவரம் ஆரம்பிக்க அவர்களின் காதலும் இனவெறியில் எரிந்துபோகும்.

**நா**ன் இதுவரை இப்படியான இரண்டு வேறுபட்ட களத்தோடு பயணிக்கும் வேறொரு நாவலையும் படிக்கவில்லை. செம்பியன் செல்வன் ஆசிரியராக இருந்த அமிர்தகங்கையில் தொடராக வந்தது. 1986ஆம் ஆண்டு நல்லூர்திருவிழாவின் புத்தகக்கண்காட்சியில் இதைக்கண்டபோது ஐஸ்பழம் வாங்க வைத்த காசில் இதை வாங்கினேன்.

**ஈ**ழத்தின் பல்வேறு பகைப்புலங்களைத் தன் கதைக்களங்களில் கையாண்டதோடு, பொருத்தமான சூழலையும் தேர்வுசெய்து புவியியல் ரீதியான விளக்கங்களைக் கொடுப்பதன் மூலம் தன் படைப்பு ஊடாக சமூகப்பார்வையினையும் வரலாற்றுத்தடங்களையும் காட்டுவது இவரின் சிறப்பம்சம். ஈழத்தின் பிரதேச வழக்கியல் பற்றிய விவரணமாகவும் இவை அமைகின்றன.

**இ**ப்படி நான் முன் சொன்ன நாவல்கள் அனைத்தையுமுமே எந்த வித உசாத்துணையுமின்றி என்னால் நினைவுபடுத்தி எழுதமுடிந்ததை வைத்தே இவரின் எழுத்துக்கள் எப்படி என்னை ஆட்கொண்டன என்பது புரியும். நான் இதுவரை வாசிக்காத அவரின் படைப்புக்கள் ஒரு சிலவற்றையும் தாயகம் போகும் போதெல்லாம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் வாங்கிக் கொள்வேன்.

**பு**லம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் சூழலில் வானொலிப் பணியிலும் என்னை ஈடுபடுத்தும் வாய்ப்பு அமைந்திருக்கிறது. எனது வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்காகப் பத்து வருடங்களுக்கு முன்னர் செங்கை ஆழியான் அவர்களை அழைத்து அவரின் எழுத்துலகத்தை ஆதி முதற் தொட்டு 45 நிமிட வானொலிப் பேட்டி எடுத்துக் கொண்டேன்.

“**எ**னக்கு நீங்கள் இன்னொரு வாய்ப்புக் தர வேண்டும்” என்று வானொலிப் பேட்டியின் முடிவில் அவர் கேட்டதும் அதற்கான சூழல் வாய்க்காததும் ஒரு புறமிருக்க, எனக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைத்தது.

**க**டந்த ஜனவரி 2016 இல் எதிர்பாராத தாயகப் பயணம் கிடைத்த ஐந்து நாட்களுக்குள் தனிப்பட்ட வேலைகளுக்கும் மத்தியில் ஒரு நாள் செங்கை ஆழியான் வீடு தேடி இழுத்துச் செல்கிறது என் கால்கள்.

**அ**ன்று தான் அவரின் 75 வது பிறந்த தினம் என்பதை அவருக்கு முன்னால் பெரியதொரு கேக் பறை சாற்ற, அவரின் குடும்பத்தினர் மட்டும் பங்கு கொண்ட விழாவில் அவரின் ஆயுள் கால வாசகனாகிய நான் திடீர் விருந்தாளியாக. இந்தச் சந்திப்பில் அவரின் எழுத்துகளின் ரசிகன் என்று சொல்ல முடியவில்லையே என்ற வருத்தம் உள்ளூர இருந்தாலும் அவரைச் சந்தித்த திருப்தி கிட்டியது.

**எ**ங்களிடமிருந்து செங்கை ஆழியானைப் பிரிக்க முடியாத பந்தத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறது அவர் கொடுத்த படைப்புகள். எங்கள் யுகம் கடந்த பின்னும் செங்கை ஆழியான் வாழ்வார்.

**செ**ங்கை ஆழியானின் படைப்புகள் குறித்து நான் முன்னர் எழுதிய, பகிர்ந்த இடுகைகள்

வாடைக்காற்று

## 1. தேற்றுவாய்



**வா**யுபுராணம் பதினெண் புராணங்களில் ஒன்று. இப் புராணம் புராணங்கள் யாவும் முதன்முதலாகப் பிரம்மாவால் கூறப்பட்டவை என்றும், பிரம்மா சொல்லக் கேட்டவர்கள் பின்பு தமது சீடர்களுக்கு அவற்றை உபதேசித்தனர் என்றும், புராணங்களை அறிவதன் மூலம் தான் வேதங்களையும், உபநிடதங்களையும் அறியமுடியும் என்றும் கூறுகிறது.

**இ**வற்றைவிட பதினெண் புராணங்களில் வாயு புராணமும், சிவபுராணமும் சேர்க்கப்படவில்லை என்று ஒரு சாராரும், இரண்டு புராணங்களும் பதினெண் புராணங்களுக்குள் அடங்குபவை என்று இன்னொரு சாராரும் கூறிக் கொண்டிருக்கின்றனர். அதனால் இவ்விரண்டு புராணங்களைப் பற்றிய சந்தேகம் ஆய்வாளர்களுக்கு இன்னும் இருக்கிறது. மச்சபுராணமும், நாரதபுராணமும் வாயு புராணம் பதினெண் புராணங்களில் நான்காவதாக எழுதப்பட்டது என்று கூறுகின்றன. யார் எதைச் சொன்னாலும் வாயு புராணம் மிக முக்கியமான பல தகவல்களை கூறுவதால் அது பதினெண் புராணங்களுள் சேர்க்கப்பட்டது. அதனால் பதினெட்டு என்பதைப் பத்தொன்பது புராணங்கள் என்று சொல்வதே பொருத்தமானது. விஷ்ணு புராணத்தில் புராணங்களுக்குரிய ஐந்து லட்சணங்களும் அழகாகவும், பொருத்தமாகவும் உள்ளன.

**வே**தவியாசர் பதினெண் புராணங்களை எழுதியபோது மூலத்தொகுப்புக்கு புராணசம்கிதை என்றே பெயரிட்டார். பரீட்சித்து மன்னனின் வம்சத்தவனான 'ஆதிசிம கிருஷ்ணன்' என்ற மன்னன் ஆட்சி செய்யும் போதுதான் வாயு புராணம் கூறப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.



**வா**யுபுராணம் சராசரி அளவுடையது. வாயுபுராணம் பூர்வபாகம், உத்தரபாகம் என இரு பிரிவுகளை உடையது. நூற்றுப் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டது. இப் புராணத்தை வாயுபகவானால் கூறப்பட்டது. அதனால் தான் இப் புராணத்திற்கு வாயுபுராணம் எனப்பெயர் ஏற்பட்டது.

**வா**யு புராணத்தைச் சொல்லு முன் குரு நாராயணனுக்கும், சரஸ்வதிக்கும், வேதவியாசருக்கும், சிவபெருமானுக்கும்,

பிரம்மாவிற்கும், வாயுபகவானுக்கும் நன்றி கூறிப் பிரார்த்தித்தல் வேண்டும். இது கட்டாயமானதாகும்.

**தி**ருஷத்வதி என்ற புனித கங்கை பாயும் இடமான புனித குருசேத்திரத்தில் ஆதிசிம கிருஷ்ணன் அரசாட்சி செய்யும் போது முனிவர்கள் ஒன்று கூடி அடிக்கடி யாகம் செய்வது வழக்கம். அப்படியான ஒரு யாகம் செய்யும் நாளில் சூதமுனிவர் யாகசாலைக்கு வர யாகம் செய்த முனிவர்கள் எல்லோரும் மிக்க மகிழ்ச்சியடைந்து அவரை வரவேற்றனர்.

**மி**த்ருக்கனின் வம்சத்தில் வாசவி என்பவன் பிறந்தான். அவனை ஒரு முனிவர் மீனாக மாறிக் கடலில் அலையும்படி சபித்துவிட்டார். அவனுடைய மகள் சத்தியவதி. சத்தியவதியின் மகன்தான் பதினெண் புராணங்களையும் எழுதிய வேதவியாசர்.

**யா**கத்திற்கு வந்த சூதமுனிவரை வரவேற்று உரிய ஆசனத்தில் அமர்த்திய முனிவர்கள், யாகம் முடிந்த பின்பு தமக்கு வாயு புராணத்தைப்பற்றிக் கூறுமாறு வேண்டினர். அங்கு வந்திருந்த நைமிசாரணியத்து முனிவர்களுக்கு சூதமுனிவர் வாயுபுராணத்தைச் சொல்லத் தொடங்கினார்.



"**மு**னிவர்களே, நைமிசாரணியம் ஒரு புனிதமான சிறந்த பிரதேசம். அதனால் தான் முனிவர்கள் தவம் செய்வதற்காக அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். நான் வாயுபுராணத்தைக் கூறுமுன், வாயுபுராணத்தை உபதேசிக்குமுன், உபதேசிப்பவர் நாராயணனுக்கும், சரஸ்வதிக்கும், வேதவியாசருக்கும், சிவபெருமானுக்கும், பிரம்மாவுக்கும், வாயுபகவானுக்கும் நன்றி கூறிப் பிரார்த்திக்க வேண்டும் என்று இப்புராணத்தை வாயுபகவான் உபதேசிக்கும்போதே கூறியுள்ளார். அதனால் நான் அவர்களைப் பிரார்த்திக்கின்றேன். நீங்களும் பிரார்த்தியுங்கள்".



**வா**யு புராணத்தை வாயுபகவான்தான் கூறினார். அதை வேதவியாசர் கேட்டுத் தனது சீடர்களுக்கு உபதேசித்தார். நான் வேதவியாசரின் சீடன் என்ற முறையில் இப் புராணத்தை உங்களுக்குச் சொல்கிறேன்.

## உ. சிருஷ்டி



**கி**ருஷ்ணன் தனது விருப்பப்படியே பூலோகத்தைப் படைத்தார். பூலோகத்தைப் படைக்கும் போது அது முழுமையாக இருண்டிருந்தது. அங்கே நீரும், காற்றும் இருக்கவில்லை. கிருஷ்ணனது வலது புறத்தில் இருந்து

நாராயணன் தோன்றினார். தோன்றும் போது அவர் சத்துவகுணம் நிறைந்தவராகவே இருந்தார். அவரது கைகளில் சங்கும், சக்கரமும், கதையும், தாமரை மலரும், கௌஸ்துப மணியும், வில்லும் இருந்தன. கருநீலநிறமுடையவராக இருந்தமையால் அவரை நாராயணன் என்று அழைத்தனர். கிருஷ்ணனது வலது புறத்தில் இருந்து தோன்றிய நாராயணன் கிருஷ்ணரைப் போற்றி வணங்கிவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டார்.

**அ**டுத்துக் கிருஷ்ணனின் இடது புறத்தில் இருந்து தாமச குணத்தோடும், மூன்று கண்களுடனும், சடாமுடியுடனும், கையில் திரிசூலத்தை ஏந்தியவராகச் சிவன் தோன்றினார்.



**கி**ருஷ்ணனது நாபியில் இருந்து தாமரை வெளிப்பட்டது. அத் தாமரையில் இருந்து ராஜச குணத்தை உடைய பிரம்மன் தோன்றினான். அவன் ஒரு முதியவராக, நரைத்தலை முடியுடன், வெண்நிற ஆடை அணிந்து, கையில் கமண்டலத்துடன், நான்கு முகங்களுடனும் அவன் காட்சியளித்தான். அவன் கிருஷ்ணனை வணங்கித் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தான்.



**அ**ப்போது கிருஷ்ணனது மார்பில் இருந்து யமன் தோன்றினான். யமனும் கிருஷ்ணனை வணங்கிவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் சென்று அமர்ந்தான்.

**அ**வர்களைப் பார்த்துச் சிரித்த கிருஷ்ணனது வாயில் இருந்து வெள்ளை நிறப் பட்டுச்சேலை அணிந்து, கையில் வீணையும், புத்தகமும் கொண்டு சரஸ்வதி வெளிப்பட்டாள். அதேவேளை கிருஷ்ணனது மனதில் இருந்து பொன்நிறமுடைய மகாலட்சுமி தோன்றினாள்.



ராஜச குணத்தை உடைய அவள் சொர்க்கத்தில் வசிப்போர்க்கு சுவர்க்கலட்சுமி என்றும், அரசர்களுக்கு அவள் ராஜலட்சுமி என்ற இருவேறுபட்ட தோற்றங்களுடன் அவள் தோன்றினாள். கிருஷ்ணனின் சிந்தனையில் இருந்து போர்த் தெய்வமான துர்க்கை தோன்றினாள். கிருஷ்ணனின் நாவில் இருந்து மந்திரங்களுக்குரிய தெய்வமான சாவித்திரியும், மனதில் இருந்து காதல் தெய்வமான மன்மதனும், அவனது இடப்பாகத்தில் இருந்து அவனது மனைவியான ரதிதேவியும் தோன்றினர். அதன்பின் அக்கினி, வருணன், வாயு ஆகியோரும் அம் மூவரின் மனைவிமாரான ஸ்வாகா, வருணனி, வயாவி ஆகியோரும் தோன்றினர்.

**அ**டுத்துக் கிருஷ்ணரிடமிருந்து பேரண்டம் தோன்றிது. அப்பேரண்டம் நீரால் சூழப்பட்டு, நீரில் மிதந்து கொண்டிருந்தது. அந்த நீரில் மிதந்து கொண்டிருந்த பேரண்டத்தில் இருந்து ஒரு

பெரிய உருவம் தோன்றிது. அவ்வுருவமே மகாவிஷ்ணுவாகும். மகாவிஷ்ணுவின் காதுகளில் இருந்து மது, கைடபர் என்ற இரு கொடிய அரக்கர்கள் தோன்றினர். அவர்கள் இருவரும் மிகவும் பயங்கரமான தோற்றத்துடன் தோன்றினர். அவர்களுக்கு எதிரே அமர்ந்திருந்த பிரம்மாவை அவர்கள் கொல்ல முயன்றனர். அதை உணர்ந்த நாராயணன் அவர்களைக் கொன்று, அவர்களின் உடலில் இருந்து வெளிப்பட்ட கொழுப்பில் இருந்து பூமியைத் தோற்றுவித்தார். இப் புராணம் உலகில் உள்ளவையாவும் கிருஷ்ணனில் இருந்து தோன்றியவை என்று கூறுகிறது. அதனால் இப் புராணம் ஏனைய புராணங்கள் யாவற்றிலிருந்தும் முற்றாக மாறுபட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. முக்கியமாக சிருஷ்டி பற்றி இப் புராணம் மாறுபாடு கொண்டிருக்கிறது.

## காலம் உருவாதல்



**கி**ருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என ஏனைய புராணங்கள் யுகங்களை நான்காக வகுத்திருக்கின்றன. அதுபோல வாயுபுராணமும் யுகங்களை நான்காக வகுத்தபோதும், இவ் நான்கையும் ஒன்று சேர்த்து மகாயுகம் என்று சொல்கிறது. முந்நூற்று அறுபது மகாயுகங்கள் ஒரு திவ்வியயுகமாகும். எழுபத்தொரு திவ்வியயுகங்கள் சேர்ந்து ஒரு மன்வந்திரம். பதின்நான்கு மன்வந்திரங்களைக் கொண்டது பிரமாவுக்கு ஒருநாள். அத்தகைய முந்நூற்று அறுபது நாட்களை உடையது பிரம்மாவுக்கு ஓர் ஆண்டு. அத்தகைய நூற்றெட்டு ஆண்டுகள் கிருஷ்ணனுக்கு ஒரு நிமிடம். இந்த ஒரு நிமிடத்தைக் கல்பம் என்று அழைக்கப்படுகிறது.

**க**ல்பங்கள் பல உள்ளன. அவை பிரம்மகல்பம், வராககல்பம், பத்மகல்பம் போன்றவையாகும். பிரம்ம கல்பத்தில் தான் மது, கைடவர்களின் கொழுப்பில் இருந்து பூமி தோன்றிது. வராக கல்பத்தில் பூமியை இரணியாக்சன் என்ற அசுரன் கவர்ந்து சென்று கடலின் அடியில் மறைத்து வைக்கத் திருமால் வராக அவதாரம் எடுத்துத் தனது கோரப் பற்களால் அசுரனைக் குத்திக் கொன்றுவிட்டு பூமியை மீட்டு வந்து நிலைநிறுத்தினார். பத்ம கல்பத்தில் பிரம்மா, திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றி பூலோகம், புவர்லோகம், சுவர்லோகங்களைச் சிருஷ்டித்தார்.

## படைப்பு

**கோ**லோகத்தில் உள்ள ராசமண்டபத்தில் கிருஷ்ணன் மிகவும் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தபோது, அவரின் இடதுபுறத்தில் இருந்து ராதை தோன்றினாள். இது பற்றிய வரலாறு பிரமவைவர்த்த புராணத்திலும் பத்மபுராணத்திலும் மட்டும் உண்டு. ஏனைய புராணங்களில் ராதையின் வரலாறு கூறப்படவில்லை.



**கி**ருஷ்ணரின் இடப் பாகத்திலிருந்து தோன்றிய ராதையின் மயிர்க் கால்களில் இருந்து ஆயிரக்கணக்கான கோபிகைகள் தோன்றினார்கள். கிருஷ்ணனது உடலில் உள்ள துளைகளில் இருந்து ஆயிரக்கணக்கான கோபர்கள் தோன்றினர். அத்துடன் பசுக்கள், எருதுகள், கன்றுகள், குதிரைகள், சிங்கங்கள், அன்னங்கள் யாவும் கிருஷ்ணனின் உடலில் இருந்தே தோன்றின. இவை தோன்றியவுடன் கிருஷ்ணன் எருதைச் சிவனுக்கும், அன்னத்தைப் பிரம்மாவுக்கும், ஆண் குதிரையைத் தர்மனுக்கும், சிங்கத்தைத் துர்க்கைக்கும் வாகனங்களாகக் கொடுத்தார். அதன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து ஐந்து தேர்கள் வெளிப்பட்டன. அவற்றைக் கிருஷ்ணன் ராதைக்கு ஒரு தேரையும், நாராயணனுக்கு ஒரு தேரையும் பரிசாகக் கொடுத்துவிட்டு ஏனைய மூன்று தேர்களையும் தனது தேவைக்காக எடுத்துக் கொண்டார்.



**அ**தன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து குபேரன் தோன்றினான். குபேரனின் இடப்பாகத்தில் இருந்து அவனது மனைவியான மனோரமா தோன்றினாள். அதன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து குபேரனின் பணியாட்களாகிய குய்யர்கள்களும், சிவபெருமானின் கணங்களாகிய பூதங்களும், நாராயணனின் சேவகர்களாகிய பர்சூவதர்களும் தோன்றினர்.



**அ**தன்பின் கிருஷ்ணன் மகாலட்சுமியையும், சரஸ்வதியையும் நாராயணனுக்குத் துணைவியராகவும், சாவித்திரியைப் பிரம்மாவுக்குத் துணைவியாகவும், ரதிதேவியை மன்மதனுக்குத் துணைவியாகவும், மனோரமாவைத் துணைவியாகக் குபேரனுக்கும் கொடுத்துத் திருமணத்தை நடத்திவைத்தார். கிருஷ்ணன் சிவபெருமானுக்குத் துர்க்கையைத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்தபோது, துர்க்கை சிவபெருமானைத் திருமணம் செய்ய

மறுத்தாள். அதனால் அவளைத் துறவியாக இருக்கும்படி கிருஷ்ணன் பணித்தான். பின் பல கல்பங்களுக்குப் பின் துர்க்கையைச் சிவபெருமான் மணந்தார். அதுவரை துர்க்கை கிருஷ்ணனது பாதுகாப்பிலேயே இருந்தாள்.

**அ**தன்பின் கிருஷ்ணன், பிரம்மாவுக்கு ஓர் அழகான மாலையை அணிவித்து, தவம் செய்யுமாறு கூறினான். தவத்தை உரிய முறைப்படி செய்து முடித்துவிட்டுப் படைப்புத் தொழிலை ஆரம்பிக்குமாறும் கூறினான். பிரம்மன் தவம் செய்யச் சென்றபோது கிருஷ்ணர், கோபிகைகளையும், கோபாலர்களையும் அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்திற்குச் சென்றார்.

## பிரமனின் படைப்பு

**த**வத்தை முறைப்படி செய்து முடித்துவிட்டுக் கிருஷ்ணரிடம் வந்த பிரம்மன் அவரை வணங்கி ஆசிபெற்றுவிட்டுப் படைப்புத் தொழிலை ஆரம்பித்தார். முதலில் உலகைப் படைத்த பிரம்மன், அடுத்ததாகச் சுமேரு மலையையும், கைலாய மலையையும், மலயம் மலையையும், இமய மலையையும், உதயசல மலையையும், அட்சாசர மலையையும், கபேலம் மலையையும், கந்தமாதனம் மலையையும் படைத்தார். அதன்பின் பல ஆறுகளையும், நகரங்களையும், கிராமங்களையும் படைத்தார். அதன்பின் லவண சமுத்திரத்தையும், இச்சு சமுத்திரத்தையும், சுரா சமுத்திரத்தையும், சர்பி சமுத்திரத்தையும், ததி சமுத்திரத்தையும், துத்த சமுத்திரத்தையும் படைத்தார். அதன்பின் ஜம்புத்வீபம், சுகத்வீபம், குசத்வீபம், பிலக்சத்வீபம், சுகத்வீபம், பிலக்சத்வீபம் என்ற ஏழு நிலப் பிரிவுகளையும் படைத்தார்.



**அ**தன்பின் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்னும் ஏழு லோகங்களையும் படைத்தார். அதன்பின் அதல, விதல, சுதல, தலாதள, மகாதள, பாதாள, ரசதல் போன்ற நகரங்களையும் படைத்தார். இவையனைத்தையும் பிரமாண்டம் என்று சொல்லப்படும். இவையாவும் மாய உருவங்களாகும். அத்துடன் இவை அழியும் தன்மை வாய்ந்தன. விஷ்ணுலோகமும், சிவலோகமும், கோலோகங்களும் ஒருபோதும் அழியாது நிலைத்திருக்கும்.

**பி**ரம்மனின் மனைவியான சாவித்திரியிலிருந்து நான்கு வேதங்களும் தோன்றின. அது தவிர ஆறுராகங்கள், முப்பத்தாறு ராகினிகள், கால அளவு என்பவற்றைப் பிரமன் படைத்துத் தனது மனைவியான சாவித்திரியிடம் ஒப்படைத்தார்.

**தே**வலோகச் சிற்பியான விசுவகர்மா, பிரம்மனது நாபியில் இருந்து தோன்றினார். அவருடன் எட்டு வசுக்கள் தோன்றின. அதன்பின் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நால்வர் தோன்றினர். அவர்களைப் படைத்த பிரமன், “நீங்கள், கிருஷ்ணரை நோக்கித் தவம் செய்து படைப்புத் தொழிலை ஆரம்பியுங்கள்” என்றார். தவம் செய்யச் சென்ற நால்வரும் தவம் செய்தார்களே தவிரப் படைப்புத் தொழிலில் அக்கறை காட்டவில்லை. அதனால் பிரம்மனுக்குக் கடுஞ்சினம் உண்டானது. அக் கோபத்தினால் பிரம்மனது நெற்றியிலிருந்து தீ கிளம்பியது. அத் தீயில் இருந்து ருத்திரன் தோன்றினான்.



**அ**தன்பின் பிரம்மனது வலது செவியில் இருந்து புலஸ்தியர் தோன்றினார். இடது செவியில் இருந்து புலகல் தோன்றினார். அவர்களுடன் பிரம்மனின் வலப்பக்கத்தில் இருந்து கிரதுவும், வலது நாசித்துவாரத்தில் இருந்து அரணியும், இடது நாசித்துவாரத்தில் இருந்து அங்கிரசரும், வலது பக்கத்தில் இருந்து பிருதுவும், இடது பக்கத்தில் இருந்து தசனும், அவரது நிழலில் இருந்து காத்தமரும், உந்தியில் இருந்து பஞ்சகிகாவும், மார்பில் இருந்து வதுவும், கழுத்தில் இருந்து நாரதரும், புஜங்களில் இருந்து மரீசியும், திரும்பவும் கழுத்தில் இருந்து அபத்தரதமனும், நாவில் இருந்து வசிட்டரும், கீழ் உதட்டில் இருந்து பிரதேசரும், இடது அக்குளில் இருந்து கம்சரும், வலது அக்குளில் இருந்து யதியும் தோன்றினர்.

**அ**வர்கள் எல்லோரையும் அழைத்து மக்களை உற்பத்தி செய்து பெருக்குமாறு பிரமன் கூறினான். நாரதரைத் தவிர ஏனையோர் பிரம்மன் கூறியதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நாரதர் அதை ஏற்காது தான் தவம் செய்யப்போவதாகக் கூறினார்.

**அ**தனால் பெருங்கோபங்கொண்ட பிரம்மன், “நாரதா, எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயத்தை நீ ஏற்காததால், நீ தீய துர்க்குணங்கள் நிரம்பிய கந்தர்வனாகப் பிறப்பாய். அப்போது நீ எந்தப் பிரம்மத்தை அடையத் தவம் செய்ய நினைத்தாயோ, அப் பிரம்மத்தைப் பற்றிய ஞானம் இல்லாதவனாக, ஒரு வேலைக்காரிக்கு மகனாகப் பிறந்து அலைவாய்” என்று சபித்தார். அதைக் கேட்டுக் கோபங்கொண்ட நாரதர் பிரம்மனைப் பார்த்து, “என்னைச் சபித்த உனக்குப் பூவுலகில் பூசைகள், ஆராதனைகள் நடைபெறாது. உனக்காக யாரும் கோவிலையும் கட்டமாட்டார்கள்” என்று சபித்தார்.

**பி**ரமனின் கட்டளையை ஏற்ற நாரதரைத் தவிர்த்த ஏனையோர் மகிழ்வுடன் படைப்பில் இறங்கினர். மரீசிக்குக் காசியபரும், அத்திரிக்குச் சந்திரனும், பிரதேசருக்குக் கௌதரும், புலஸ்தியருக்கு அகத்தியரும் பிறந்தனர்.

## ३. அட்டாங்க யோகங்கள்



**த**வம் செய்வதற்கும், யோகநிலையை அடைவதற்கும் முதற்காரணியாக அமைந்தது பிரணாயாமம் ஆகும். பிரணாயாமம் மூன்று வகையானது. பன்னிரு மாத்திரை காலம் செல்வதை 'மந்தம்' ஆகும். பிரணாயாமத்தை இருபத்தொரு மாத்திரை காலம் செய்தால் அதை மத்திமம் எனப்படும். பிரணாயாமத்தை முப்பத்தாறு மாத்திரை காலம் செய்தால் அதை உத்தமம் என்று சொல்லப்படும். பிரணாயாமத்தைச் செய்யும் போது மூன்று விதிகளைக் கட்டாயம் பேணுதல் வேண்டும். காற்றை உள்ளே இழுப்பதைப் பூரகம் என்றும், உள்ளே இழுத்த காற்றை உள்ளே இருத்துவதைக் கும்பகம் என்றும், பின் உள்ளே இழுத்த காற்றை வெளியே விடுவதை பேரசகம் என்றும் கூறப்பட்டுள்ளது.

**இ**டது மூக்குத் துவாரத்தினூடாகக் காற்றை உள்ளே இழுத்து குறிக்கப்பட்ட நேரம் அக்காற்றை உள்ளே நிறுத்தி, பின் வலது மூக்குத் துவாரத்தினூடாகக் காற்றை வெளியே விடவேண்டும். இதைப் பிராணாயாமவியவஸ்தை எனப்படும். பிரணாயாமம் செய்வதன் மூலம் ஒருவர் தனது உடலைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். அவ்வாறே உயிரையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

**யோ**கம் ஐந்து படிமுறைகளைக் கொண்டது.

1. **பிரணாயாமம் –** இதுபற்றி மேலே கூறப்பட்டுள்ளது.

2. **பிரத்தியாகாரம் –** பிரணாயாமத்தின் போது உள்ளே இழுத்த காற்றை உள்ளே நிலைநிறுத்தி செயலிழக்கச் செய்து வேறு செயல்களில் ஒதுக்கியிருத்தலே பிரத்தியாகாரம் ஆகும்.

3. **தாரணை** – பொறிகளை புலன்களில் இருந்து விடுவித்து அதை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி உள்முகமாக ஆராய்வதே தாரணையாகும்.

4. **தியானம் –** தாரணையின் போது மனம் ஒருநிலைப்படும். அந்த நிலைமாறாது நிலைத்திருக்கச் செய்வது தியானம் ஆகும்.

5. **சமாதி** – ஆதிக்குச் சமமாகப் பிரம்மமாக இருத்தல். இது அட்டாங்க யோகத்தின் இறுதி நிலையாகும்

## 4. சிவனின் எட்டுப் பெயர்கள்



**ஒ**ரு சமயம் பிரம்மன் தன்னைப் போல வலிமையும், வீரியமும் உள்ள ஒரு மகன் தனக்குப் பிறக்க வேண்டும் என்று நினைத்தார். அவர் அவ்வாறு நினைத்ததும் அவரின் மடியில் நீல நிறமுடைய ஒரு குழந்தை தோன்றி அழ ஆரம்பித்தது. அதன் அழுகையை நிறுத்துமாறு பிரம்மன் சொன்னபோது அந்தக் குழந்தை தனக்குப் பெயர் வைக்குமாறு கூறியது. அதைக்கேட்ட பிரம்மன் அதற்கு ருத்திரன் என்று பெயர்வைத்தார். பெயர் வைத்த பின்பும் அக் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. அதனால் பிரம்மா, “உனக்குப் பெயர்வைக்கச் சொன்னாய் நான் ருத்திரன் என்ற பெயரை வைத்தேன். பெயர் வைத்த பின்பும் ஏன் அழுகிறாய்” என்று கேட்டார். அதற்கு அக் குழந்தை, “எனக்கு ஒரு பெயர் போதாது” என்றது. அதனால் பிரம்மன் அதற்கு எட்டுப் பெயர்களை வைத்தார். அவை பின்வருமாறு.

1. **பவன் –** பவன் இருப்பிடம் நீராகும். சிருஷ்டிகள் அனைத்தும் நீரின் மேலேயே நிற்கின்றன. சிருஷ்டியின் ரகசியங்களை முழுமையாக அறிந்தவன் இவன். இவனது மனைவியின் பெயர் உசா. மகனின் பெயர் சுக்கிரன்.



2. **சிவன் –** சிவனது இருப்பிடம் பூமியாகும். உயிர்கள் வசிப்பதற்கு ஆதாரமாக இருப்பது பூமியாகும். உடல் சர்வமாகும். மனைவியின் பெயர் விகேசி, மகனின் பெயர் அங்காரகன்.

3. **பசுபதி** – பசுபதி அக்கினியில் வீற்றிருக்கிறார். எமது உடலில் இருக்கிறான் உடல் வைச்வா நரம்பு, மனைவியின் பெயர் சுவாகாதேவி மகனின் பெயர் கந்தன்.

4. **ஈஸ்வரன் –** ஈஸ்வரனது இருப்பிடம் வாயுவாகும். இவ் வாயு உயிர்களின் உடலில் பிராணவாயுவாகவும், அபான வாயுவாகவும், விதான வாயுவாகவும், சமான வாயுவாகவும்

இருக்கிறது. இவ் வாயுக்களால் தான் உயிர் வாழ்கிறது. ஈஸ்வரனின் உடல் ஈசானியம் மனைவியின் பெயர் சிவை. மகனின் பெயர் மனோஜவன்.

5. **பீமன் –** இவனின் இருப்பிடம் ஆகாயமாகும். அத்துடன் மனிதர்களின் உடலில் உள்ள துவாரங்களிலும் சிவன் இருக்கிறான். பத்துத் திசைகளும் சிவனது மனைவியர். உடலைப் பீமம் என்பர். மகனின் பெயர் ஸ்வர்க்கன்.



6. **உக்கிரன் –** இடம் யாகதீட்சை செய்யும் எஜமான். யாகத்தின் மூலம் சிவனைத் திருப்தி செய்யலாம். உடல் உக்கிரமாகும். மனைவியின் பெயர் தீட்சை. மகனின் பெயர் சந்தானன்.

7. **மகாதேவன் –** இவனது இருப்பிடம் சந்திரனாகும். இவன் மருந்துகளின் அதிபதியாகி அவற்றைப் பெருகச் செய்து உயிர்களுக்கு அன்னத்தைக் கொடுப்பவன். இவனது உடல் சாத்திரமசம். மனைவியின் பெயர் ரோகினி. மகனின் பெயர் புதன்.

**சூ**ரியன் தனது கதிர்களால் பூமியிலும், கடல், நதிகளிலும் உள்ள நீரை வெப்பப்படுத்தி ஆவியாக மாற்றி மேகத்தில் இருந்தும் பின் அந்த மேகங்கள் ஆவகம், பிரவகம், உத்வகம், சம்வகம், விவகம், பரிவகம் என்ற ஏழுமுறைகளால் வாயுக்கள் மூலம் நீரை இழுத்துக் கொள்ளும்.

| **திசைகள்** | **பாலகர்** | **அவர்களின் நகரம்** |
|---|---|---|
| 1. கிழக்கு | இந்திரன் | அமராவதி |
| 2. தெற்கு | யமன் | சம்யமணி |
| 3. மேற்கு | வருணன் | சுகி |
| 4. வடக்கு | சந்திரன் | அலகாபுரி |

5. திக்குப்பாலகரும் அவர்களின் நகரங்களும்
மேருமலையின் மேற்குப் பகுதியில் மாசைரோவரம் உள்ளது. அதைச் சுற்றிவரத் திக்குப்பாலகர்களின் இருப்பிடங்கள் உள்ளன.



**கிரகங்கள் –** விண்மீன்கள், கிரகங்கள், சந்திரன் முதலிய சேதிடமண்டலத்தில் உள்ள அனைத்தும் சூரியனில் இருந்து வெளிப்பட்டவையேயாகும்.

**சூரியன் செல்லும் வேளை** – உதயம், நண்பகல், அஸ்தமனம், நள்ளிரவு, நள்ளிரவு உதயம், நண்பகல் அஸ்தமனம், நள்ளிரவு உதயம்.

**சூ**ரிய கிரணங்கள் ஏராளம் ஏற்படுவதுண்டு. ஆனால் அவற்றுள் முக்கியமான கிரணங்கள் ஏழாகும். அந்த ஏழு சூரியகிரணங்களில் இருந்துதான் ஏழு கிரகங்கள் தோன்றின.

| **கிரணம்** | **கிரகம்** |
|---|---|
| 1. ஹரிகேசவன் | தானேயான சூரியன் |
| 2. சுப்சம்ன | வளரும் தேயும் சந்திரன் |
| 3. சம்பத் வசுவு | குஜன் அங்காரன் |
| 4. விச்வகர்ம | புதன் |
| 5. அர்வாவசுவு | பிரகஸ்பதி |
| 6. விச்வச்ரவன் | சுக்கிராச்சாரியார் |
| 7. தவராட்டு | சனி |



**வி**ண்மீன்கள் என்று சொல்லப்படும் நட்சத்திரங்கள் பிரளயத்தின்போது கூட அழியமாட்டாது. அதனால்தான் இப்பெயர் ஏற்பட்டது. சூரியன் நட்சத்திரங்களைத் தன்னுள் அடக்கியிருப்பதால் சூரியனும் ஒரு நட்சத்திரமாகும். புண்ணியங்களைச் செய்து முத்தியடைவோர்க்கு இவை வீடுபோல அமைவதால் அவற்றிற்குக் கிரகங்கள் என்ற பெயர் ஏற்பட்டது. நட்சத்திரங்கள் வெண்ணிறமுடையனவாகவும், வெண்மையான ஒளியை வெளியேற்றுவதாலும்தான் நட்சத்திரங்கள் என்ற பெயர் ஏற்பட்டது.

**இ**ருளைத் தன்னுள் மறைத்து ஒளியை வெளிவிடுதலால், சூரியனுக்கு ‘ஆதித்தியன்’ என்ற பெயர் ஏற்பட்டது. ஒளியைப் பரப்புவதாலும், மழையைப் பொழியச் செய்வதாலும் சூரியனுக்கு ‘சவித’ என்ற பெயர் ஏற்பட்டது. உலகில் வாழ்வோரை மகிழ்ச்சியளித்து, அமுதைப் பொழிவதால் சந்திரன் என்ற பெயர் ஏற்பட்டது. சூரியனது ஒளிமண்டலம் சந்திரனது மேகமண்டலம் எனப்பெயர் பெற்றது. ராகுவும் கேதுவும் நிழற்கிரகங்களாகும். அதன் காரணமாக இரண்டும் சாயாக்கிரகங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## ௬. யாஜிஞவல்லியர் சரிதம்

**ஜ**னக மகாராஜா பெரும் வீரர், பலசாலி. அயல்நாடுகளையெல்லாம் கைப்பற்றிச் சக்கரவர்த்தியானவர். அவருக்குத் தனது பெருமைகளை உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும்

என்ற ஒரு நினைவு வந்தது. அதற்காக இதுவரை யாரும் செய்யாத ஒரு மிகப்பெரிய அஸ்வமேத யாகத்தைச் செய்ய நினைத்தார். அதற்கான ஏற்பாடுகளை மிகவும் பெரியளவில் செய்ய ஆரம்பித்தார். மூவுலகங்களிலும் உள்ள அரசர்கள், பிராமணர்கள், வேதியர்கள் அனைவரையும் அழைத்தார். தேவர்கள் அனைவரும் வந்திருந்தனர்.



**யா**கம் தொடங்கமுன் ஜனக மகாராசா யாகசாலைக்கு வந்தார். அங்கு லட்சக்கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். ஆயிரக்கணக்கான முனிவர்கள் வந்திருந்தனர். அவர்களுள் சிறந்தவர் யார் என்பதை அறிந்து அவருக்குப் பரிசுப் பொருட்கள் கொடுக்க விரும்பிய ஜனக மகாராசா யாகசாலைக்கு அருகில் ஆயிரக்கணக்கான பசுக்களையும், பொன், மாணிக்கம், மரகதம், முத்து ஆகியவற்றைக் கொண்டு வந்து குவித்துவைத்துவிட்டுச் சொன்னார், “இவை அனைத்தையும் முறைப்படி வேதங்களைக் கற்று ஓதும் சிறந்த அறிவாளியான ஒரு முனிவருக்குக் கொடுக்கத் தீர்மானித்துள்ளேன். மிகச் சிறந்த வேதசாத்திர நிபுணர் யார் என்று இச்சபையில் உள்ளவர்கள் கூறினால் அவருக்கு இதில் குவிக்கப்பட்டுள்ள அத்தனை பொருட்களையும் கொடுப்பேன்” என்றார்.

**அ**வற்றைக் கேட்ட முனிவர்கள் ஆச்சரியப்பட்டனர். இவ்வளவு பொருட்களையும் பெறவல்லவர் யார் என்று நினைத்துக் கதைக்க ஆரம்பித்தனர். ஆனால் யாருக்கும் வேதசாத்திரத்தில் சிறந்தவர் யார் என்று சொல்ல முடியவில்லை. அங்கு குழுமிருந்த பல முனிவர்கள் வேத சாத்திரங்களில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். அதனால் யாரைக் கூறுவது என்று புரியாமல் திகைத்தனர்.

**சி**ல நிமிடங்கள் சபையில் சலசலப்பு ஏற்பட்டது. யஜ்ஞவல்லியார் என்ற வேதசாத்திர வல்லுனர் எழுந்தார். அவர் யாரைச் சொல்லப்போகிறார் எனப் பலரும் ஆவலோடு அவரது முகத்தைப் பார்த்தனர். அவர் கூறினால் அது சரியாக இருக்கும் என்று ஜனக மகாராசா நம்பினார். ஆனால் அவர் எழுந்து, “மூவுலகங்களிலும் நான்தான் வேதசாத்திரத்தில் நிபுணன். என்னை வெல்ல யாராலும் முடியாது. சகல சாத்திரங்களையும் கற்ற விற்பன்னன் நான்தான். அதனால் இங்கு வைக்கப்பட்ட பொருட்களெல்லாம் எனக்கே சொந்தமானவை” என்றார் மிடுக்குடன்.

**அ**தை ஏனைய முனிவர்கள் ஏற்கவில்லை. பலரும் பல முனிவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்தான் சிறந்த வேதசாத்திர நிபுணர் அவருக்குக்தான் கொடுக்க வேண்டும் என்றனர். சபை குழம்பியது. வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. யஜ்ஞவல்லியார் ஒரு பக்கமும்,

ஏனைய முனிவர்கள் மறுபக்கமும் இருந்து வாதித்தனர். ஒவ்வொரு முனிவரும் எழுந்து நின்று யஜ்ஞவல்லியரிடம் மிகவும் நுட்பமான கேள்விகளைக் கேட்டனர். முனிவர்கள் கேட்ட கேள்விகளுக்கு யஜ்ஞவல்லியர் விரிவான விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.



**இ**ருப்பினும் யஜ்ஞவல்லியரின் வாதத்தை ஷகல்யர் என்ற முனிவர் ஏற்காது ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கேட்டார். அவற்றிற்கெல்லாம் யஜ்ஞவல்லியர் விரிவான பதிலைச் சரியாகக் கூறிக்கொண்டிருந்தார். அதேநேரம் யஜ்ஞவல்லியார் கேட்ட கேள்விகளுக்கு ஷகல்லியரால் சரியான பதிலைக் கூறமுடியவில்லை. அதனால் முனிவர்கள் யஜ்ஞவல்லியாரே சிறந்த வேதசாத்திர நிபுணர் என்று ஒப்புக்கொண்டனர்.

**வா**தத்தில் வென்ற யஜ்ஞவல்லியார் அங்கு குவித்துவைக்கப்பட்டிருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு தனது ஆச்சிரமத்திற்கச் சென்றார். அவரது குரு வைசம்பாயனர். ஒருசமயம் வைசம்பாயனர் ஒரு மிகக் கடினமான கிரியையைச் செய்ய விரும்பி அதைச் செய்யத் தொடங்கினார். அப்போது அவர் தனது சீடர்களைத் தனக்கு உதவியாளர்களாகச் செயற்படுத்தினார். அப்பொழுது யஜ்ஞவல்லியார் தனது குருவைப் பார்த்து, “குருவே, தாங்கள் செய்யப்போகும் கிரியைக்குத் தங்களின் பலநூறு சீடர்கள் தேவையில்லை. நான் ஒருவனே போதும். என்னென்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள்” என்றார். அதைச் சீடர்கள் விரும்பாது பல்வேறுபட்ட நியாயங்களை எடுத்துக் கூறினர். அதனால் கோபங்கொண்ட வைசம்பாயனர், “இப்படியான ஓர் அகம்பாவம் பிடித்த சீடன் எனக்குத் தேவையில்லை. அதனால் என்னிடம் கற்ற கல்வியைத் திருப்பித் தந்துவிடு” என்று கட்டளையிட்டார்.



**அ**தைக்கேட்ட யஜ்ஞவல்லியார் முன்பு வைசம்பாயனர் அவருக்குக் கற்பித்த யசுர்வேதத்தை அவரின்முன் கக்கிவிட்டார். அந்த யசுர்வேதத்தை வைசம்பாயனருக்கு வேதவியாசர் கற்பித்திருந்தார். அது ஓர் அருமையான வேதம். அதனால் அதைக் கற்கும் போது யஜ்ஞவல்லியார் பெரும் மகிழ்ச்சியடைந்தார். அப்படியான சிறப்புமிக்க வேதத்தைக் கக்கிவிட்டு அவர் சூரியனை நோக்கிப் பலகாலம் தவம் செய்து சூரியதேவனிடமிருந்து யசுர்வேதத்தைக் கற்றார். யஜ்ஞவல்லியார் கக்கிய யசுர்வேதத்தை அங்கிருந்த முனிவர்களின் சீடர்கள் பறவைருபமெடுத்து அதை உண்டுவிட்டனர். அவர்கள் அதனால் பெற்ற அறிவால் மிகவும் சிறந்த வேதவிற்பன்னர்களாகி தைத்திரிய சம்கிதையை உருவாக்கினர் என்று சில புராணங்கள் கூறுகின்றன.

## 7. தாயின் குணம்

**கா**சியப முனிவரின் ஒரு மனைவியான கசை என்பவள் பெண்களுக்குரிய எந்தக் குணமும் இல்லாத கொடுமைக்காரி. அவள் அநாவசியமாக மற்றவர்கள் மீது கோபப்படுவாள். கடுமையான சொற்களைப் பேசுவாள். யாரையும் மதிக்கமாட்டாள். தன்னை மிகமிக உயர்வாகக் கருதுவாள். மற்றவர்களைக் கீழானவர்களாகக் கருதி அவமானப்படுத்துவாள். பொறாமை, அர்த்தமில்லாத பேச்சு போன்றவற்றால் அவளைக் கண்டதும் மற்றவர்கள் விலகிச் சென்றுவிடுவார்கள். அது தனக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பு, கௌரவம் என்றுதான் அவள் நினைப்பாள். அதனால் காசியப முனிவர் அவளின் விருப்பத்திற்கு மாறாக ஒருபோதும் நடக்கமாட்டார். அவள் கேட்டவற்றை அவர் செய்து கொடுக்காவிட்டால் பெரும் பிரளயத்தை உருவாக்கிவிடுவாள்.

**அ**வளுக்குப் பலகாலமாகப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் பிள்ளைகளைப் பெற்ற காசியபரின் ஏனைய மனைவிமாருடன் முரண்படுவாள். ஒருநாள் அவள் தனது கணவனான காசியப முனிவருக்குச் சொன்னாள், "நாதா, நாம் திருமணம் செய்து பலகாலமாகியும் பிள்ளைப்பேறு கிடைக்கவில்லை. அதனால் என்னை எல்லோரும் பரிகசிக்கின்றனர். மலடி என்று வாய் கூசாமல் சொல்கின்றனர். அதனால் எனக்குகொரு பிள்ளை பிறக்க வேண்டும்" என்றாள்.



**கா**சியப முனிவர் அவளின் பேச்சைக் கேட்டு அவளுக்கு விரைவில் குழந்தை பிறக்கும் என்று அருளினார். காலகதியில் அவள் கர்ப்பமுற்றாள். ஒருநாள் மாலைவேளையில் அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். அந்த மகனுக்கு நான்கு கால்கள், நான்கு கைகள், இரண்டு தலைகள், உடல் முழுவதும் ரோமங்கள், பெரிய மூக்கு, அழகில்லாத பெரிய இரண்டு காதுகள், பானைபோன்ற பெரிய வயிறு என்பவையுடன் அவன் பிறந்ததால் மிகவும் அசிங்கமானவனாக அவன் இருந்தான். அவன் பிறந்த நேரம் அசுரசக்தி வேளை நடைபெற்றது.

**க**சை மறுநாள்க் காலை மற்றொரு மகனை ஈன்றாள். அப்பாலகனும் அசுரவேளையில்தான் பிறந்தான். அக்குழந்தைக்கு மூன்று தலைகளும், மூன்று கண்களும், மூன்று கால்களும், மூன்று கைகளும் இருந்தன. அத்துடன் பரட்டைத்தலை, பெரியமீசை, இரும்பு போன்ற நசிபடாத உடல், இரண்டு நாக்குகள் என்று ஒழுங்கற்ற உடலமைப்புடன் பயங்கரமான தோற்றத்தில் அக்குழந்தை இருந்தது.

**பி**றந்த மறுநாளே அவர்கள் இருவருக்கும் பயங்கரமான பசியெடுத்தது. மூத்தமகனுக்கு உணவு கொடுத்துக் கொடுத்துத் தாய் களைப்படைந்துவிட்டாள். அவள் உணவு கொடாததால் அவன் தாயைக் கடித்து உண்ண முயன்றான். அதை இளையமகன் தடுக்க இருவருக்குமிடையே பெரும் சண்டை உண்டானது.

**பெ**ரும் கூச்சல் குழப்பச் சத்தம் கேட்க அங்கு காசியப முனிவர் வந்தார். அவரைக் கண்டதும் இரு புத்திரர்களும் தாயின் மடியில் அமைதியாகப் படுத்திருந்தனர். அதைக்கண்ட காசியப முனிவர், "புத்திரர்களுக்குத் தாயின் குணமே இருக்கும். அதனால் அவர்கள் தாயைப்போலவே வாழ்வார்கள். பெண் பிள்ளைகள் பெற்றோரை அனுசரித்து அன்புடன் வாழ்வார்கள்" என்றார்.

**அ**தைக்கேட்ட கசை தனது மூத்த மகன் தன்னை உண்ண முற்பட்டபோது இளைய மகன் தடுத்ததாகக் கூறினாள். அதைக்கேட்ட காசியப முனிவர் தின்னுதல் என்ற அர்த்தத்தை உடைய யசன் என்ற பெயரை மூத்தமகனுக்கும், காத்திடு என்ற அர்த்தத்தை உடைய ரட்சகன் என்ற பெயரை இளைமகனுக்கும் வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். அவர்கள் இருவரும் இரவில் காடுகளுக்குச் சென்று மிருகங்களை வேட்டையாடி அவற்றின் இரத்தத்தைக் குடித்தும், மாமிசங்களை உண்டும் வாழ்ந்து வந்தனர்.

## 8. பலராமனின் திருமணம்



**ம**னுவம்சத்தைச் சேர்ந்த குகுத்மி என்ற மன்னன் குசஸ்தலீ என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு நாட்டை ஆண்டு வந்தான். அவன் மிகவும் நேர்மையானவன். ஒழுக்கசீலன். அவனது ஆட்சியில் மக்கள் எந்தவிதமான சஞ்சலங்களுமின்றி மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். குகுத்மியின் ஒரே ஒரு செல்ல மகள் ரேவதி. நல்ல குணங்கள் யாவும் கொண்ட அழகி.

**ரே**வதி நற்குணமும் அழகும் வாய்ந்தவளாக இருந்தபோதும் நெடுநாட்களாக அவளுக்குத் திருமணம் நடைபெறவில்லை. பலதேசத்து இராசகுமாரர்களை நேரிலும், முனிவர்களைக் கொண்டு கேட்பித்தும் அவர்கள் எவரும் அவளைத் திருமணம் செய்யச் சம்மதிக்கவில்லை.

**அ**தனால் மிக்க கவலையடைந்த குகுத்மி மன்னன் தனது மகளான ரேவதியையும் அழைத்துக் கொண்டு பிரம்மலோகம் சென்று தனது மகளின் எதிர்காலம்பற்றி பிரம்மதேவனைக் கேட்டு அறியலாம் என்று நினைத்து அங்கு சென்றான்.



மன்னனும், மகளும் சத்தியலோகத்திற்குச் சென்றபோது பிரம்மா அங்கு நடைபெற்ற ஒரு பெரும் கலைநிகழ்வில் கலந்து அதை ரசித்துக் கொண்டிருந்தார். வீணையை இனிமையாக மீட்டிக் கந்தவர்கள் பாடிக்கொண்டிருந்தனர். அப்ஸ்சரஸ் பெண்கள் அவர்களின் இனிமையான பாடல்களுக்கேற்ப நடனம் ஆடிக்கொண்டிருந்தனர். சபை நிசப்தமாக இருந்தது. அங்கு இருந்த யாருக்கும் அருகில் நடைபெறுவதுகூடத் தெரியவில்லை. அந்தளவில் அந்த நிகழ்ச்சி மிகவும் பிரமாதமாக இருந்தது. மன்னன் பிரம்மதேவரைப் பார்த்தான். அவர் சுயநினைவில்லாதவர் போல அந்தக் கலைநிகழ்வோடு ஒன்றியிருந்தார்.

நீண்ட நேரம் கலைநிகழ்வு நடைபெற்றதால் மன்னனும் மகளும் பொறுமையை இழந்து பிரம்மதேவரைச் சந்திப்பதற்காகக் காத்திருந்தனர். பலநாட்களாக நடைபெற்ற அந்தக் கலைநிகழ்ச்சி முடிந்து பிரம்மா வெளியே வந்தபோது மன்னனையும் மகளையும் கண்டார். அவர் அவர்களின் அருகில் வந்து, "மன்னா, நலமுடன் இருக்கிறாயா? அரசியல் எவ்வாறு நடைபெறுகிறது. இது யார்? உனது மகளா? இருவரும் என்னை எதற்காகக் காண வந்தீர்கள்?" என்று கேட்டார்.

குகுத்மி பிரம்மதேவரை வணங்கினான், "பகவானே, இது எனது மகள் ரேவதி. ஒரே மகள். தவமிருந்து பெற்றெடுத்தேன். திருமணவயது வந்தும் பொருத்தமான வரன் கிடைக்கவில்லை. அதனால் பெரும் வேதனை அடைகிறேன். அதனால்தான் தங்களைச் சந்திக்க மகளுடன் வந்தேன். தாங்கள் அவளுக்கேற்ற வரன் யார்? அவர் எங்கிருக்கிறார்? எப்போது திருமணம் நடைபெறும். அவர்களது வாழ்க்கை செழிப்பாக இருக்குமா?" என்று மன்னன் கேட்டான்.



"மன்னா, ஆதிசேசன் பூமியில் பலராமன் என்ற பெயரில் அவதரித்திருக்கிறான். அவன்தான் உனது மகளுக்கான மாப்பிள்ளை. திருமணம் மிகவும் கோலாகலமாக நடைபெறும். மணமக்கள் பெரும் இன்பமாக வாழ்வர்" என்று பிரம்மதேவன் கூற குகுத்மி மிக்க ஆனந்தமடைந்து பிரம்மாவுக்கு நன்றிகூறிவிட்டுத் தனது நாட்டுக்குத் திரும்பினான்.

அவனும் மகளும் தமது நாட்டுக்கு வந்துசேரப் பலயுகங்கள் கழிந்துவிட்டன. நாடு முற்றாக மாறி இருந்தது. முன்பு உயரமாக வளர்ந்திருந்த மக்கள் அப்போது மிகவும் குள்ளமானவர்களாகக் காட்சயளித்தனர். ஆனால் குகுத்மியும் அவனது மகளான ரேவதியும் எந்தவிதமான மாற்றங்களும் இன்றி மிகவும் அழகாகவும், பொலிவாகவும் இருந்தனர்.

பிரம்மலோகத்திற்குச் சென்றவர்களுக்கு முதுமையோ, மரணமோ ஏற்படாதென்று பிரம்மதேவர் கட்டளையிட்டிருந்தமையால் இருவரும் மிகவும் இளமையாகவும் அழகாகவும் இருந்தனர்.



**ச**த்தியலோகத்தில் இருந்து திரும்பி வந்த குகுத்மி தனது மகளான ரேவதியையும் அழைத்துக் கொண்டு துவாரகைக்குச் சென்றான். கிருஷ்ணரையும், பலராமரையும் சந்தித்துத் தாம் சத்தியலோகத்திற்குச் சென்று பிரம்மதேவரைச் சந்தித்ததையும், அவர் கூறியதையும் எடுத்துச் சொன்னான். ரேவதியை விடப் பலராமன் உருவத்தில் சிறியவனாகக் காணப்பட்டதால் பலராமன் தனது கலப்பையால் அவளது உருவத்தைத் தனக்கேற்றதுபோல மாற்றியமைத்துத் திருமணம் செய்துகொண்டான். தனது மகளிற்குத் திருமணம் நிறைவேறியதால் மிக்க மகிழ்ச்சியடைந்த மன்னன் குகுத்மி தவம் செய்யக் காட்டுக்குச் சென்றான்.

## ௯. சோமனின் வரலாறு



**அ**த்திரிமா முனிவர் மூவாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் செய்தபோது அவரின் உடல் சோமரசமயமானது. அதனால் அவரது கண்களில் இருந்து சோமரசம் வெளிப்பட்டது. அதைக் கண்ட பிரம்மதேவர் தேவதாஸ்திரிகளை அழைத்துவந்து அந்தச் சோமரசத்தை அருந்துங்கள். அந்தச் சோமரசம் மூலம் நீங்கள் கர்ப்பம் தரிப்பீர்கள். அதனால் உங்களுக்கு வீரியமான குழந்தைகள் பிறப்பார்கள் என்றார். அதைக்கேட்டு மகிழ்ந்த தேவதாஸ்திரிகள் மிக்க மகிழ்வுடன் அந்தச் சோமரசத்தை அருந்திக் கருவுற்றனர். ஆனால் அக் குழந்தைகளின் பாரத்தை அந்தத் தேவதாஸ்திரிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் அவை அவர்களின் வயிற்றில் இருந்து நழுவி விழுந்து யாவும் ஒன்றாக இணைந்து ஒரு குழந்தையாகின. அக்குழந்தை தான் சந்திரன். உடனே பிரம்மதேவர் சந்திரனைத் தூக்கி தேரில் ஏற்றிக்கொண்டு செல்ல பிரம்மாவின் மானச புத்திரர்கள் வேதமந்திரங்களை ஓதி இருவரையும் துதித்தனர். பிரம்மாவுடன் சந்திரன் தேரில் சென்று பூமியை இருபத்தொரு முறை சுற்றிவந்தான். அப்பொழுது பூமியில் தாவரங்கள் தோன்றின.

**அ**தன்பின் சந்திரன் தவம் செய்து தனது சக்தியைப் பலமடங்கு பெருக்கிக் கொண்டான். அதனால் மகிழ்ந்த பிரம்மதேவர், சந்திரனை ஔடத சாம்பிராஜ்யத்திற்குச் சக்கரவர்த்தியாகப் பட்டாபிசேகம் செய்து வைத்தார்.



**ச**ந்திரனது பெருமைகளை அறிந்த தட்சன் தனது இருபத்தேழு புத்திரிகளை அவனுக்குத் திருமணம் செய்துவைத்தார். பதவியைப் பெற்ற சந்திரனுக்கு அகந்தை அதிகரித்தது. அதனால் அவன் பெரும் ஆணவங்கொண்டு ஆங்கிரசர் ஆகிய தவவலிமை பெற்ற பல முனிவர்களை எதிர்த்துப் போர்செய்தான். பின்பு தேவகுருவான பிரகஸ்பதியின் மனைவியான தாராவை பலாத்காரமாகக் கடத்திச் சென்று குடும்பமாக வாழ்ந்தான். ரிஷிகளும், முனிவர்களும், தேவர்களும் அவன் குருவின் மனைவியைக் கடத்திச் சென்றது மகாபாவமான செயல் என்று அறிவுரை கூறினர். அதைச் சந்திரன் கவனிக்காது தனது அகந்தையான போக்கைவிடவில்லை. அதனால் அவர்கள் கண்டித்தனர். அதையும் அவன் பொருட்படுத்தவில்லை. அதனால் தேவர்களுக்கும் சந்திரனுக்கும் பெரும்போர் நடந்தது. இதைச் சாதகமாகப் பயன்படுத்தித் தேவர்களை அழிக்கவிரும்பிய சுக்கிராச்சாரியார் அசுரரின் பெரும் படையைத் திரட்டிவந்து தேவர்களுடன் கடுமையாகப் போர்புரிந்தார்.

**அ**சுரர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத தேவர்கள் தம்மைக் காப்பாற்றுமாறு பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர். அதனால் பிரம்மா சந்திரனிடம் சென்று தர்மத்தை விளக்கமாகக் கூறித் தாரையைச் சந்திரனிடமிருந்து மீட்டுவந்து பிரகஸ்பதியிடம் ஒப்படைத்தார். அந்த நேரம் தாரை கர்ப்பமுற்றிருந்ததால் பிரகஸ்பதி அவளை ஏற்க மறுத்தார். அவள் அக் கருவை விட்டு விட்டு வந்தால் தான் அவளை ஏற்பதாகக் கூறினார். அதன்படி தாரை அக் கருவை ஒரு மரத்தடியில் விட்டுவிட்டாள். அக் கரு உடனே ஒரு அழகான குழந்தையாகிப் படிப்படியாக வளர்ந்து ஒரு சிறுவனாகியது. அச்சிறுவனின் அழகையும், அறிவையும் கண்டு மகிழ்ந்த தேவர்கள் வியப்படைந்தனர். தாரை அக்குழந்தைக்குத் தந்தை சந்திரன் என்று கூறினாள். அதைச் சந்திரன் எடுத்துச் சென்று புதன் எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான்.

## 10. வாரணாசி



**ஒ**ரு சமயம் திவோதாசன் என்ற மன்னன் காசிநகரை ஆண்டுவந்தான். அப்போது சிவபெருமான், பார்வதிதேவியைத் திருமணம் செய்து கொண்டு இமயமலை அரசனான இமவானின் வீட்டில் இருந்தனர். பார்வதியின் தாயாருக்கு ஒருபோதும் சிவபெருமானைப் பிடிப்பதில்லை. அவரது தோற்றம் அவளுக்கு வெறுப்பைக் கொடுத்தது. திருமணத்தின் போது அவர் மாப்பிள்ளைக் கோலத்தில் வந்த இந்திரன், பிரம்மா போன்றவர்களின் உடையையும் அலங்காரங்களையும் பார்த்து அவர்களில் ஒருவர்தான் பார்வதியின் கணவர் என்று நினைத்தவள். பின்பு சிவபெருமானின் கோபத்தைக் கண்டு அவரை வெறுத்தவள். அந்த வெறுப்பு இப்போது இருந்தது.

**ஒ**ருநாள் பார்வதியின் தாயாரான மேனகைக்குச் சிவபெருமானின் தோற்றம், நடை, உடை பாவனையை நினைத்துக் கவலைப்பட்டாள். ஆனால் பார்வதி தனது கணவனைவிட அழகன், அறிஞன் வேறு யாரும் இல்லை என்ற கர்வத்துடன் நடந்து கொள்வாள். இது மேனகைக்குப் பிடிப்பதில்லை. அன்று பார்வதி தனது கணவனைப்பற்றிப் போற்றிப் புகழ்ந்து தாயாரோடு கதைத்தபோது தாயாருக்குப் பெருங்கோபம் வந்தது. அதனால் கோபத்துடன் சொன்னாள், “உனது கணவனை எப்போதும் புகழ்கிறாய், துதிக்கிறாய், உலகில் உள்ள அனைவரையும் விட மேலானவர் என்கிறாய். இப்படிச் சொல்ல உனக்கு வெட்கம் இல்லையா? உனது கணவன் ஆசாரமில்லாதவர். ஒருவர் மயானத்திற்குச் சென்றால் உரியமந்திரங்களை ஓதித் தன்னைப் புனிதப்படுத்த வேண்டும் உனது கணவன் பைத்தியம் பிடித்தவன் போல தினமும் இரவில் சென்று பேய், பிசாசுகளுடன் ஆடிப்பாடி மகிழ்கிறார். மாயானம் என்பது இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்யுமிடம். அங்கு தினமும் சென்றுவிட்டு எமது வீட்டுக்குத் தீட்டுடன் வந்து உன்னுடன் பேசிச்சிரிக்கிறார். இதுதான் எல்லாம் வல்ல எல்லாம் அறிந்தவரின் இயல்போ? மயானத்திற்கு எப்போதாவது ஒருமுறை சென்றவன் அதனால் உண்டான தீட்டை உரிய முறைப்படி நீக்குகிறான். உனது கணவன் தினமும் இரவுமுழுவதும் பேய்களுடன் உறவாடிவிட்டுத் தீட்டைக் கழிக்காது உலாவித்திரிகிறார். இத்தகைய ஆசாரமற்றவனை உயர்ந்தவன் என்று நீ ஆராயாது கூறுகிறாய். அத்துடன் சுடலைப்பொடியை விருப்புடன் தனது உடல் முழுவதும் பூசிகிறான். மண்டை ஓடுகளைக் கோர்த்து மாலையாக அணித்துள்ளான். இவையெல்லாம் மிகவும் கேவலமானவை என்று உனக்குப் புரியவில்லையா?

அத்துடன் தீட்டுடன் எமது வீட்டுக்கு வந்து வீட்டையும் அசிங்கப்படுத்துகிறார். எனது கணவர் பெரியதொரு நாட்டின் மன்னர். அவரது பேரில் பலகோடிரூபா பெறுமதியான ஆபரணங்கள் உண்டு. அப்படியான பெறுமதிமிக்க அழகிய ஆபரணங்களை வாங்கித் தந்தாலும் அவர் அணிவதில்லை. அப்படியான ஒருவர் இந்த உலகத்தில் உனது கணவர்மட்டும் தான். அப்படி இருந்தும் அவரை நீ மிகவும் உயர்ந்தவர் என்று சொல்வதும், மேலானவர் என்று பொய்யுரைப்பதும் எனக்குக் கவலையையும் அவமானத்தையும் தருகிறது" என்றாள்.



**தா**யின் சுடுசொற்களைக் கேட்ட பார்வதி, சிவபெருமானிடம் வந்து, "நாதா, உங்களது பெருமையையும், மகிமையையும் புரிந்துகொள்ள முடியாத எனது தாயார் பணம், பொருள் முதலிய நிலையில்லாப் பொருட்கள் மீது மோகம் கொண்டு பற்றுகளற்று அமைதியாக வாழவிரும்பும் உங்களை அவமானப்படுத்துகிறார். ஒரு பெண்ணுக்குத் தனது கணவன்தான் தெய்வம். அதை உணராது தினமும் உங்களைப்பற்றிக் கேவலமாகக் கதைக்கும் எனது தாயாரை எனக்குப் பிடிக்கவில்லை. மதியாதார் முற்றம் மிதிக்கக் கூடாதென்று உங்களுக்கு முருகனின் விடயத்தில் ஔவைப்பாட்டி சொன்னது நினைவில் இல்லையா…? அதனால் நாம் இங்கிருப்பது முறையல்ல. அதனால் நாம் எமது வீட்டுக்குச் செல்வோம்" என்றாள்.

**பா**ர்வதியின் உருக்கமான பேச்சைக் கேட்டு மனம் வருந்திய சிவபெருமான் பார்வதியையும் அழைத்துக் கொண்டு கங்கைக்கரையில் திவோதாசன் என்ற மன்னன் ஆட்சிசெய்துவரும் வாரணாசியில் சென்று வாழவிரும்பி, நிகும்பன் என்ற கணநாதனை அழைத்து தனக்கோர் இருப்பிடத்தை அங்கு அமைக்குமாறு கூறினார்.

**சி**வபெருமானின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக நிகும்பன் வாரணாசிக்குச் சென்று ஒரு சிற்பியின் கனவில் தோன்றித் தன்னைப்போன்றதொரு விக்கிரகத்தைச் செய்து புறநகர்ப்பகுதியில் செய். அவ்வாறு நீ செய்து முடித்தாயேயானால் உனக்குச் சர்வமங்களங்களும் உண்டாகும் என்று கூறினான்.

**அ**தனால் மிகவும் மகிழ்ந்த சிற்பி அவன் சொன்னபடி விக்கிரகம் செய்து அதைப் பிரதிஷ்டை செய்து தினமும் தீபதூப நைவேத்தியங்களைப் படைத்துப் பூசை செய்து வரலானான். நாளடைவில் அக்கோவிலைப் பற்றிய பலவிதமான அதிசயமான செய்திகள் பரவின. அச்செய்திகளை மன்னனும் அறிந்து கொண்டான்.



**கா**சியை ஆண்ட மன்னனான திவோதாசன் திருமணம் செய்து பல ஆண்டுகள் கழிந்தும் அவனுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. அது அவனுக்குப் பெருங்கவலையைக் கொடுத்தது. புதிதாக அமைக்கப்பட்ட கோவிலில் அதிசயமான சம்பவங்கள் நடைபெறுவதால் அவன் தனது மனைவியை அழைத்து அந்த ஆலயத்திற்குச் சென்று பூசை வழிபாடுகளைச் செய்து புத்திரபாக்கியத்தைப் பெற்றுவரும்படி கூறினான். அங்கு தினமும் மகாராணி சென்று நிகும்பனுக்குப் பூசை செய்துவந்தாள். நெடுநாட்களாக மகாராணி முறைப்படி பூசை செய்தும் அவளுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் மிக்க கோபங்கொண்ட திவோதாசன் தனது ஏவலாட்களை அனுப்பிக் கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கினான்.

**கோ**விலை இடித்ததால் பெரும்மனக்கவலையடைந்த நிகும்பன் மன்னனிடம் சென்று, "ஏன் கோவிலை இடித்தீர்கள். கோவிலை இடிப்பது மகாபாவம் அல்லவா?" என்று கேட்டான்.

**அ**வனது கேள்வியினால் கோபங்கொண்ட மன்னன், "கேட்டவற்றையெல்லாம் அச்சுவாமி அள்ளிக் கொடுப்பதாக நீங்கள் வதந்தியைப் பரப்பினீர்கள். அதை நம்பி மகாராணி பலகாலம் அக்கோவிலுக்கு வந்து முறைப்படி பூசைகளைச் செய்து வணங்கியும் அவர்களுக்குப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் பயனில்லாத கோவில் எதற்கு என்று இடித்துவிட்டேன்" என்றான் மன்னன்.

"**ம**ன்னா, தாங்கள் அறிவுடையவராக இருப்பீர்கள் என்று நம்பினேன். அது பிழை தெய்வநம்பிக்கை மட்டும் பலன் தருவதில்லை. முன்ஜென்ம கர்மப்படியே மறுஜென்மத்தில் வாழ்க்கை நடைபெறுகிறது. பெரும் பெரும் அரசர்களுக்கும், முனிவர்களுக்கும் பிள்ளைகள் பிறக்காத இடத்து அவர்கள் தமது ஜாதகத்தைப் பார்த்துப் பரிகாரங்களைச் செய்வதை நீ அறியவில்லையா? இவற்றை எண்ணிப் பாராது நான் அரசன் என்ற திமிரில் ஒரு புனிதமான கோவிலை இடித்து அழித்துவிட்டாய். இது மகாபாவமாகும். இப்பாவத்தால் உனது நாடு நாசமாகும் என்று சபித்துவிட்டுச் சென்றான்.

**அ**தனால் அங்கு குடியிருந்த மக்கள் எல்லோரும் ஊரைவிட்டு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். மன்னனும் தான் கோவிலைக் காரணமின்றி இடித்துவிட்டேன் என்று வருந்தி அப்பாவம் தீரத் தவம் செய்யக் காட்டுக்குச் சென்றான்.

**இ**ப்போது வாரணாசி முற்றாக மாறிவிட்டது. மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். அச் செய்தியை நிகும்பன் சிவபெருமானுக்குக் கூறினான். சிவபெருமான்



தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்து தான் அங்கு சென்று வசிப்பதற்கான ஒரு மாளிகையை அமைக்கும்படி கூறினார். அதை மிக்க மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மா சொர்க்கத்தை விட அழகான பெரியதொரு மாளிகையை அமைத்துக் கொடுக்கச் சிவனும் பார்வதியும் அம் மாளிகையில் குடியேறினர்.

**சி**லகாலம் சிவபெருமானும், பார்வதிதேவியும் அம்மாளிகையில் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அதன்பின் பார்வதிக்கு அம்மாளிகையில் வாழ விருப்பமில்லாதிருந்தது. அவள் சிவபெருமானிடம் சென்று, "நாதா, இந்த மாளிகையில் நாம் பலகாலம் வாழ்ந்துவிட்டோம். இனி இன்னொரு புதிய இடத்திற்குச் சென்று வாழ்வோம்" என்று கூறச் சிவபெருமான் சொன்னார், "இது ஒரு புனிதமான புண்ணியப் பிரதேசம். இப்பிரதேசம் எனக்கு நன்கு பிடித்துவிட்டது. அழகான மாளிகை. அருகே புனிதமான தலம். அதன் அருகே புண்ணியமான கங்கைநதி பாய்கிறது. ஏராளமான முனிவர்கள் இங்கு வந்து தவம் செய்து முத்தியடைகின்றனர். அதனால் இந்தப் புண்ணியதலத்தை விட்டு விட்டு வர நான் விரும்பவில்லை. உனக்கு இங்கிருக்க விருப்பமில்லாவிட்டால் நீ உனக்கு விருப்பமான இடத்திற்குச் சென்று மகிழ்வுடன் வாழ்" என்றார். சிவபெருமானின் மனநிலையை உணர்ந்து செயற்படும் பார்வதி தனது கணவனின் விருப்பத்தை ஏற்று மௌனமாக இருந்தாள். அன்று முதல் வாரணாசி நகரம் விடப்படாத நகரம் என்ற பொருளையுடைய 'அவிமுத்த நகரம்' என்ற பெயரைப் பெற்றது.



**இ**ச்சம்பவம் சுவாயம்பு மனுவந்தரத்தில் ஒரு யுகத்தில் நடைபெற்றதாக இப்புராணம் கூறுகிறது. அதன்பின் புதுயுகம் தோன்ற அந்த நகரம் அழிந்துவிட்டது. தவம் செய்து கொண்டிருந்த திவோதாசன் இவற்றை அறியவில்லை. அந்நகரைப் பத்திரசிரேண்யன் என்பவன் கைப்பற்றி அந்நகரை அழகாகப் புணரமைப்புச் செய்து ஆண்டு வந்தான்.

**த**வத்தை நல்ல முறையில் முடித்துவிட்ட திவோதாசன் படைதிரட்டி வந்து பத்திரசிரேண்யனைத் தோற்கடித்து காசிநகரைக் கைப்பற்றி நீதியாக ஆண்டுவந்தான். அப்போது அவனுக்கு புத்திக்கூர்மையும், அறிவும், பலமும் மிக்க புத்திரன் ஒருவன் பிறந்தான்.

## 11. ரஜி இந்திரனாதல்



**தி**வோதரனின் வம்சத்தில் வந்த அவர்க்கண் என்ற மன்னனின் காலத்தில் வாரணாசி நகரம் ராஜ்ஜியமானது. சீரும் சிறப்புடனும் உயர்ந்த ராஜ்ஜியமாக விளங்கியது. அவர்கண் என்ற மன்னன் பெரும் வீரன். நீதிநெறி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். வாரணாசி நகரை அவன் புதுப்பொலிவடையச் செய்தான். அதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் தாமதிக்காது செய்துவந்தான். முனிவர்கள் அங்கு வந்து ஆச்சிரமம் அமைத்துத் தமது சீடர்களுடன் எந்தக் குறைகளும் இன்றி வாழ்ந்து வந்தனர். அங்கு வேதங்கள் முறைப்படி ஓதப்பட்டன. அந்நகரம் சகல வசதிகளையும் கொண்ட சொர்க்கபுரியாகத் திகழ்ந்தது. அதனால் ஏராளமான மக்கள் அங்கு வந்து புனித கங்கையில் நீராடித் தமது பாவங்களை நீக்கினர்.

**அ**வர்க்கன்னின் மகன் ரஜி. அவன் தந்தையைப் போல பலமும் பராக்கிரமும் உடையவன். நாட்டை நீதியாக ஆண்டு வந்தமையால் நாட்டு மக்கள் அனைவரும் தமது கண்கண்ட தெய்வம் என்று அவனைப்போற்றி வணங்கினர். அவனுக்கு ஐந்நூறு புத்திரர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுத் தலைசிறந்த வீரர்களாக விளங்கினர். ரஜி மன்னன் எல்லோருடனும் அன்பாகவும், நட்பாகவும், எளிமையாகவும் பழகுவதால் அவனுக்கு எதிரிகள் என்று யாரும் இல்லை.

**ர**ஜி மிகவும் நீதியாக நாட்டை ஆண்டு வருகையில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே பெரும் போர் ஏற்பட்டது. தேவர்கள் பிரம்மாவிடம் சென்று அவரை வணங்கி, "பிரம்மதேவரே, தேவர்களுக்கும், அசுரர்களுக்குமிடையே என்றுமில்லாத ஒரு பெரும்பகை வந்ததால் இரு பகுதியினரும் மிகவும் கடுமையாகப் போரிடுகின்றனர். இதில் அசுரர்கள் வென்றால் அவர்கள் எம்மை மதிக்காது கொடுமைப்படுத்துவர். அதனால் இப்போரில் யார் வெல்வார்கள் என்று கூறுங்கள்" என்று கேட்டனர்.



**பி**ரம்மா சற்று யோசித்துவிட்டுச் சொன்னார், "தேவர்களே, அசுரர்களும் தேவர்களும் இப்போது சமபலமுடையவர்களாக இருக்கின்றனர். அதனால் அழிவுதான் ஏற்படும். மன்னனான

அவர்க்கனின் மகன் ரஜி பெரும் பலசாலி. சுத்தமான வீரன். சகல ஆயுதங்களையும் கையாள்வதில் வல்லவன். அதனால் அவன் எந்தப் பக்கம் சேர்கிறானோ அந்தப் பக்கத்தினர் இலகுவாக எதிரிகளை வென்றுவிடுவர்" என்றார்.



**அ**தனால் தேவர்களும், அசுரர்களும் ரஜி மன்னனைத் தம்பக்கம் சேர்க்க முயன்றனர். தேவர்கள் ரஜி மன்னனைத் தமது பக்கம் சேரும்படி வற்புறுத்த அவன், "தேவர்களே, எனக்குப் பலகாலமாக இந்திரப் பதவியின் மீது ஆசை உள்ளது. நான் அசுரருடன் போராடி உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவேன். அதற்குப் பதிலாக நீங்கள் எனக்கு இந்திரப் பதவியைத் தரவேண்டும்" என்றான். தேவர்கள் மிகுந்த அச்சத்தில் இருந்தமையால் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

**பெ**ரும்போர் ஏற்பட்டது. அதில் ரஜியும் அவனது படைவீரர்களும் திறமையாகப் போராடிப் பல அசுரர்களின் தலைவர்களையும், தளபதிகளையும் கொன்றனர். தோல்வியடைந்த அரக்கர்கள் பாதாளத்திற்குத் தப்பிஓடி விட்டனர். அதனால் தேவர்கள் வாக்களித்தபடி ரஜிக்கு இந்திரப்பதவியை வழங்கினர். அதனால் இதுவரை காலமும் இந்திரனாக இருந்த இந்திரன் ரஜியிடம் வந்து அவனை வணங்கி, "நீ திரிலோகாதிபதியான இந்திரப்பதவியை உனது பலத்தால் பெற்றுவிட்டாய். அதனால் எனக்குக் கவலை இல்லை. ஒரே ஒரு வரம் எனக்குத் தந்தருளவேண்டும்" என்று கேட்டான். அதைக்கேட்ட ரஜி மன்னன், "நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்று சொல்ல இந்திரன், "நான் உனக்கு மகனாகப் பிறக்க அருள வேண்டும்" என்றான். ரஜி மன்னன் அதை ஏற்றுக் கொண்டான்.



**ர**ஜி மன்னனின் பிள்ளைகள் தந்தை இந்திரனானதும் அவர்கள் சொர்க்கத்திற்குச் சென்றனர். அதன்பின் அவர்களுக்கும் இந்திரனாக வேண்டும் என்ற ஆசை உண்டானதால் தமது தந்தையை ஒரு பொம்மையாக்கி ஒரு கரையில் இருத்திவிட்டுத் தாமே அதிகாரத்தைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினர். அதனால் பெரும் வேதனைப்பட்ட தேவேந்திரன், பிரகஸ்பதியிடம் சென்று இந்தச் சிக்கலைத் தீர்த்துவைக்குமாறு வேண்டினான். அத்துடன் தற்பொழுது எனக்குரிய அவிப்பாகம் கிடைக்காததால்தான் உணவின்றிப் பசியால் துன்பப்படுவதாகவும் கூறினான்.

**அ**தைக்கேட்டு மிக்க கவலையடைந்த பிரகஸ்பதி தேவேந்திரனைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு அரசகுமாரர்களுக்குப் புத்திபேதலிக்க வேண்டும் என்று கருதி அபிசாரஹோமம்

நடத்தினார். அதனால் பெரும் பலசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் விளங்கிய ரஜியின் பிள்ளைகள் புத்திபேதலித்து தமது பலத்தையும், அறிவையும் இழந்தனர். அத்துடன் அவர்கள் காரணமின்றித் தேவர்களையும் பிராமணர்களையும் வருத்தினர். தூசித்தனர்.

ரஜி மன்னனின் புத்திரர்களின் மனப்பேதலிப்பைச் சாதகமாகக் கொண்ட இந்திரன் ரஜி மன்னனையும் அவனது பிள்ளைகளையும் கொன்றுவிட்டுத் தனது இந்திரப்பதவியைப் பெற்றுக் கொண்டான்.



## 12. துண்டுமாறனும் உதங்க முனிவரும்



சூரியவம்சவாரிசான விருஹத்வஷனுக்கு இருபத்தோராயிரம் பிள்ளைகள் இருந்தனர். அவனது மூத்த மகனான குவலஷ்வனிடம் விருஹத்வஷன் அரசை ஒப்படைத்துவிட்டுக் காட்டுக்குச் சென்று தவம் செய்யச் செல்ல விரும்பினான். ஆனால் மகனுக்கு முடிசூட்ட ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோது அரண்மனைக்கு உதங்கமுனிவர் வந்தார். அவரைப் பெருமதிப்புடன் வரவேற்ற மன்னன் அவரை ஆசனத்தில் அமர்த்தினான். அப்போது உதங்கமுனிவர், "மன்னா, நான் கடற்கரையில் ஆச்சிரமம் அமைத்து எனது மாணவர்களுக்கு வேதங்களைக் கற்பித்துவருகிறேன். சமீபகாலமாகத் துண்டு என்ற மிகவும் கொடிய அரக்கன் வந்து எமது ஆச்சிரமத்தை அழித்து மாணவர்களுக்குப் பெரும் தொல்லைகள் கொடுக்கிறான். அவனது கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவனைக் கொன்று எம்மைக் காப்பாற்ற வேண்டும்" என்று கேட்டார்.

"முனிவரே, தாங்கள் வந்த நேரம் சரியில்லை. எனது ஆயுதங்கள் அனைத்தையும் எனது மகனான குலவஷ்வனிடம் ஒப்படைத்துவிட்டுத் துறவறம் செல்லத் தீர்மானித்துவிட்டேன். அதனால் எனது மகனை அழைத்துச் செல்லுங்கள். அவன் பெரும் வீரன். பலசாலி. கட்டாயம் அரக்கனைக் கொன்று உங்களது எண்ணத்தை நிறைவேற்றுவான்" என்றார்.

குவலஷ்வன் தனது படையுடன் சென்று துண்டு என்ற அரக்கன் இருந்த இடத்தின் மண்ணைத் தோண்டினான். அதுவரை மணலுள்ப் புதையுண்டு மறைந்திருந்த அரக்கண் மண்ணில் இருந்து விடுபட்டு எழுந்து குவலஷ்வனுடன் பெரும் போர் செய்தான். அங்கு நடந்த பெரும் போரில் குவலஷ்வனின் மூன்று சகோதரர்களைத் தவிர ஏனையோர் இறந்துவிட்டனர். இறுதியில் குவலஷ்வன் துண்டு என்ற அரக்கனைக் கொன்றான். அதனால் அவனுக்குத் துண்டுமாறன் என்ற பெயர் ஏற்பட்டது.

## திரிசங்குவும் சசுரனும்

**தி**ரிதஷ்வனுக்குப் பின்பு ஆண்ட திரியருனி என்ற மன்னன் நீதிநெறி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். அவன் தர்மவானாக இருந்தமையால் நாட்டு மக்கள் எந்தவிதமான குறைகளுமின்றி மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். மக்கள் மன்னனைத் தெய்வமாக நினைத்து வாழ்ந்தமையால் நாட்டில் எந்த விதமான குறைகளும் இருக்கவில்லை. மாதமும் மாரி பொழிந்ததால் வயல்கள் நன்றாக விளைந்தன. தோப்புக்களில் உள்ள மரங்களால் காய்த்த காய்களைச் சுமக்க முடியவில்லை. கோவில்களில் நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. பிராமணர்கள் மனநிறைவோடு மகிழ்வுடன் வேதமோதினர். கலைஞர்கள் புதிய புதிய நடனங்களையும், நாடகங்களையும் மேடையேற்றினர்.

**தி**ரிதஷ்வனின் புத்திரனான சத்தியவிரதன் தந்தைக்கு நேர்மாறானவனாகத் திகழ்ந்தான். அவன் நாட்டு மக்களுடன் மிகவும் கொடுமையாக நடந்து கொள்வான். அவனது பெயரைக் கேட்டாலே நாட்டு மக்கள் பயந்து நடுங்குவர். மன்னனுக்கு யாவும் தெரிந்தபோதும் புத்திர பாசத்தால் அவற்றைக் காணாதது போல இருந்தான்.



**ச**த்தியவிரதனின் கொடுமைகளைத் தாங்க முடியாது மக்கள் பெருந்துன்பப்படுவதைக் கண்ட வசிட்ட முனிவர், திரி மன்னனிடம் வந்து சத்தியவரதனின் தீய செயல்களை விளக்கமாகக் கூறி அவனை நாடு கடத்துமாறு வேண்டினார். அதைக் கேட்ட மன்னன் துடிதுடித்துப் போனான். வசிட்டர் பெரும் தவஞானி அவர் சொல்வதைக் கேட்காவிட்டால் தன்னை அவர் சபித்து விடுவார் என்ற பயத்தால் மன்னன் தனது மகனை நாடுகடத்தினான். சத்தியவிரதன் காட்டுக்குச் சென்று சண்டாளர்களுடன் வசித்து வந்தான்.

**ம**கனைப் பிரிந்தமையால் மிகுந்த வேதனையுடன் நாட்டை ஆண்டு வந்த திரியருனி தவம் செய்யக் காட்டுக்குச் சென்றுவிட்டான். நாட்டை ஆள அரசன் இல்லாமையால் நாட்டில் தீயசெயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. கொலை, களவு, பஞ்சம் என்பன நாட்டில் தாராளமாக நடைபெற்றன. அமைதியாகவும், மகிழ்வுடனும் வாழ்ந்த மக்கள் பெருந்துன்பப்பட்டனர். பருவமழை பொய்த்தமையால் நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியது. உண்ண உணவின்றி மக்கள் பெருந்துன்பப்பட்டனர். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன.



**அ**ந்நாட்டில் வாழ்ந்த விசுவாமிந்திர முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தமையால் அவருடைய மனைவியும் மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாயினர். விசுவாமித்திரரின் பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தமையால் விசுவாமித்திரரின் மனைவி தனக்கும், பிள்ளைகளுக்கும் உணவுகிடைக்காததால் பெரும் துன்பப்பட்டுத் தனது மகனை யாருக்காவது விற்றுவிட்டு அவர்கள் கொடுக்கும் பணத்தில் சீவிக்கலாமென்று நினைத்துத் தனது மகனின் கழுத்தில் கயிறு கட்டி அழைத்துச் சென்று ஒருவரிடம் ஆயிரம் பசுக்களைப் பெற்றுக் கொண்டு தனது மகனை அவனுக்கு விற்று விட்டாள். விசுவாமித்திரரின் மகனின் கழுத்தில் கயிறு கட்டி இழுத்துச் சென்றதால் அவனுக்குக் காலவன் எனப் பெயருண்டானது.

**வி**சுவாமித்திரரின் மனைவியும் பிள்ளைகளும் நாட்டிற்கு அரசனில்லாததால் படும் துன்பத்தை அறிந்து சத்தியவிரதன் மிக்க வேதனைப்பட்டான். தவவலிமை மிக்க பெரும் முனிவரான விசுவாமித்திரரின் மனைவி வறுமை காரணமாகத் தனது மகனின் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்று ஒருவனுக்கு விற்றதை சத்தியவிரதனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவன் விசுவாமித்திரனின் மகனை வாங்கியவரிடம் சென்று உரிய தொகையைக் கொடுத்து அவனை மீட்டு வந்து விசுவாமித்திரரின் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் தினமும் வேட்டையாடும் விலங்குகளின் மாமிசங்களைக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தான். இருந்தபோதும் தனது தந்தையிடம் சொல்லித் தன்னை நாடு கடத்திய விசுவாமித்திரரைப் பழிவாங்க வேண்டும் என்ற நினைவு அவனது மனதில் இருந்தது. ஒருநாள் விசுவாமித்திர முனிவரின் பசு ஒன்று காட்டில் மேய்ந்து கொண்டிருந்தது. அது விசுவாமித்திர முனிவரது பசு என்று தெரிந்ததும் சத்தியவிரதன் அதைக் கொன்று அதன் இறைச்சியை விசுவாமித்திர முனிவரின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்துத் தானும் உண்டான்.



**த**னது பசுவைச் சத்தியவிரதன் கொன்று அதன் மாமிசத்தை உண்டுவிட்டான் என்று விசுவாமித்திரர் அறிந்து மிக்க கோபங்கொண்டு சபித்தார். சத்தியவிரதன் தகப்பனின் கோபத்திற்கு ஆளானமை, பசுவைக் கொன்றது. அதன் இறைச்சியை உண்டது எனச் சத்தியவிரதன் மீது மூன்று பழிகளைச் சுமத்தியதோடு அவன் எதிர்காலத்தில் திரிசங்கு என்ற பெயரைப் பெறுவான் என்றும் சபித்தார்.

**சி**லகாலம் சென்ற பின்பு விசுவாமித்திர முனிவர் தனது தவத்தை நல்லமுறையில் முடித்துக் கொண்டு வீடு திரும்பிய போது அங்கு சத்தியவிரதன், அவரது மனைவி மக்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தான்.

**தா**ன் குடும்பத்தவர்களை மறந்து காட்டில் தவம் செய்த காலத்தில் பஞ்சத்தால் தவித்த தனது குடும்பத்தினருக்குச் சத்தியவிரதன்தான் உணவு கொடுத்துக் காப்பாற்றியவன் என அறிந்து மிக்க மகிழ்வுடன் அவனைப் பார்த்து, "மிகவும் இக்கட்டான வேளையில் எனது மனைவி விற்ற எனது மகனை விடுவித்து அவர்களுக்கு எந்தக் குறைகளும் இல்லாமல் காப்பாற்றிய உனக்கு வரம் தர விரும்புகிறேன். விரும்பியதைக் கேள்" என்றார்.

"**சு**வாமி, வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களால்தான் களைத்துவிட்டேன். இன்பங்கள் எதையும் நான் அனுபவிக்கவில்லை. அதனால் நான் இந்த மானிட உடலுடன் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும்" என்று கேட்டார்.

"**அ**ப்படியே செல்லக் கடவாய்" என்று விசுவாமித்திரர் கூறி அவனை ஆசீர்வதித்தார். அதன்பின் திரிசங்கு நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றான். விசுவாமித்திர முனிவர் அவனின் முக்கிய குருவானார்.

### சசுரன்

**தி**ரிசங்குவின் மகன் அரிச்சந்திரன். இவனது வம்சத்தைச் சேர்ந்தவன் பாகு. பாகுவுக்குக் காமம் அதிகம். அதனால் அவன் எந்நேரமும் தனது மனைவிமாருடன் கூடியிருந்து இல்லற சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான். நாட்டில் நடைபெறுவன எவையும் அவனுக்குத் தெரியாது. படைவீரர்களுக்கு ஒழுங்கான பயிற்சியளிக்கப்படவில்லை. நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுவதில்லை. அவனது பலவீனத்தை அறிந்த பகைவர்கள், அவன் பெண்களுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கும் போது படையுடன் வந்து நாட்டைக் கைப்பற்றினர். பாகு மன்னன் தனது மனைவியுடன் சேர்ந்து நாட்டை விட்டுத் தப்பி வந்து காட்டில் வசித்து வந்தான்.

**பா**கு மன்னனை கதயர்களும், தலஜங்கா மன்னர்களும் சேர்ந்து நாட்டைவிட்டுத் துரத்தினர். அவர்களுக்கு யவனர்களும், பரதர்களும் பச்லவர்களும் உதவினர்.

**சி**லகாலம் செல்ல காட்டில் பாகுமன்னன் இறக்க, அவனது மனைவியான யாதவி உடன் கட்டையேற விரும்பினாள். பாகுமன்னன் அவளின் மீது அளவுக்கதிகமான காதல் கொண்டிருந்தான் ஆனால் அவள் கர்ப்பமாக இருந்தமையால் பெரியவர்களும், முனிவர்களும்

அவளது விருப்பத்தைத் தடை செய்தனர். அவுர முனிவர் அவள் மீது இரக்கம் கொண்டு அவளைத் தனது ஆச்சிரமத்துக்கு அழைத்து வந்தார்.

**பா**குவிற்குப் பல மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருத்தி யாதவிக்கு விஷம் கொடுத்துக் கொல்ல நினைத்தாள். விஷத்தை யாதவி அருந்திய போதும் அவ் விஷத்தால் அவளுக்கப் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் அவளுக்குப் பிறந்த குழந்தை நஞ்சுடன் பிறந்தது. குழந்தை நஞ்சுடன் பிறந்ததால் அதைச் சசுரன் என்று அழைத்தனர்.

**அ**வுர முனிவரின் ஆச்சிரமத்தில் வளர்ந்த சசுரனுக்கு அவுர முனிவர் சகல வித்தைகளையும், சகல விதமான கல்வியையும் கற்பித்தார். அத்துடன் புனிதமான பலம்மிக்க ஆக்கேய அஸ்திரத்தை ஏவும் முறைகளையும் கற்பித்தார்.



**பெ**ரும் பலவானாகவும், அறிவு மிக்கவனாகவும் சசுரன் வளர்ந்து வந்தான். அவன் உரிய வயது வந்ததும் தனது தந்தையை அரச கட்டிலில் இருந்து விரட்டிய பகைவர்கள் அனைவரையும் அவர்களின் இருப்பிடங்களுக்குத் தேடிச் சென்று ஆக்கினேய அஸ்திரத்தால் தாக்கிச் சிறைப்பிடித்தான். சிறைப்பிடித்த பகைவர்களை சசுரன் சிரச்சேதம் செய்ய விரும்பினான். அதை அறிந்த வசிட்ட முனிவர், சசுரனிடம் வந்து, “மன்னா, நிராயுதபாணியாக்கி விட்டு அவர்களைக் கொல்வது தர்மமாகாது. போரில் நீ அவர்களைக் கொல்வது தான் தர்மம். அதைவிட்டு விட்டு கைது செய்தபின் கொலை செய்வது பாவம். அதனால் அவர்களது தலைமுடியை நீக்கி அவமானப்படுத்து. அத்துடன் அவர்கள் ஒருபோதும் வேதங்களைப் படிக்கக்கூடாதென்று ஆணையிடு” என்று கூறச் சசுரன் அவர்களை மக்கள் மத்தியில் நிறுத்தி மொட்டை அடித்து அவமானப்படுத்தினான். சசுரனால் தோற்கடிக்கப்பட்ட கோன்சர்ப்ப மன்னர்களும், மகிஷகர்களும், தர்வார்களும், சோழர்களும், கேரளர்களும் பெரும் அவமானப்பட்டனர்.

**ச**சுர மன்னனுக்கு கேசினி, சுமதி என்று இரண்டு மனைவியர் இருந்தனர். அவுர முனிவரின் அருளால் கேசினிக்கு ஒரு மகனும், சுமதிக்கு அறுபதினாயிரம் மக்களும் பிறந்தனர். கேசினியின் மகனின் பெயர் பஞ்சஜனன். சுமதியின் வயிற்றில் இருந்து பூரவைக் காய் வடிவில் இரு மாமிசப் பிண்டம் பிறந்தது. அதை ஒரு பெரிய நெய்ப்பாகையுள் வைக்குமாறு அவுர முனிவர் கூற சசுர மன்னன் அவுர முனிவரின் சொற்படி ஒரு பெரிய பானையை எடுத்து அதை நெய்யால் நிரப்பி அப்பானைக்குள் அதை வைத்தான். சில நாட்களின் பின் அத் தசைப்பிண்டத்தில் இருந்து அறுபதினாயிரம் மக்கள் தோன்றினர்.



**ச**சுர மன்னன் உலகம் முழுவதையும் கைப்பற்ற விரும்பி ஓர் அசுவமேத யாகம் செய்து அவ் யாகத்தில் செய்யப்பட்ட குதிரையை உலகெங்கும் திரியவிட்டான். அக் குதிரையை சசுரனின் அறுபதினாயிரம் மக்கள் காவல் காத்துக் கொண்டு உலகை வலம் வந்தனர். குதிரை எங்கும் சென்று இறுதியாகத் தென்கிழக்குக் கடற்கரைக்கு வந்தது. நெடுத்தூரம் அலைந்த களைப்பால் சசுரனின் மக்கள் கடற்கரையில் ஓய்வெடுத்தனர். பலர் அயர்ந்து தூங்கிவிட்டனர். விழித்தெழுந்து பார்த்தபோது குதிரையைக் காணவில்லை.



**வி**ழித்தெழுந்த சசுரனின் மக்கள் குதிரையைக் காணாது திகைத்துவிட்டனர். குதிரையை யார் களவாடினார்கள் என்று அவர்களுக்குப் புரியவில்லை. பெரும் பலசாலிகளான தம்மை எதிர்க்கக் கூடியவர்கள் யார் என்ற அகந்தை அவர்களின் மனதுள் புகுந்ததால் அவர்கள் மிகுந்த கோபங்கொண்டு குதிரையைத் தேடிச் சென்றனர்.

**தெ**ன்கிழக்குக் கடற்கரைக்கு அருகில் பெரிய காடு இருந்தது. அக் காட்டுக்குள்ச் சென்ற அவர்கள் காடு முழுவதையும் தேடினார்கள். குதிரைகளைக் காணவில்லை. அதனால் மிக்க கோபங் கொண்ட அவர்கள் காட்டுள்ச் சென்றபோது ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். கோபமிகுதியுடன் வந்த அவர்கள் முனிவர் தவம் செய்வதை உணராது அவரை எழுப்பி விசாரிக்க முடிவு செய்து அவரை எழுப்பினர்.

**நி**ஷ்டை கலைந்து எழுந்த முனிவர் அவர்களைக் கோபத்துடன் உற்று நோக்க, அவர்களில் பலர் எரிந்து சாம்பலானார்கள். உயிர் தப்பிய வர்கிகேது, சுகேது, தர்மகேது, பஞ்சஜனன் ஆகிய நால்வர் எரியாது உயிர்தப்பினர்.

**ப**ஞ்சஜனின் மகன் சுமசுமனன். சுமசுமனின் மகன் திலீபன். திலீபனின் மகன் பகீரதன்.

## 13. கயாசுரனின் கதை



**கா**யாசுரன் ஓர் அரக்கன். ஆனால் சிறந்த விஷ்ணுபக்தன். அவன் தாமச குணமுடைய அரக்கன். அவன் விஷ்ணுவைநோக்கிப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கடுந்தவம் செய்தான். அதனால் அவனது உடலில் இருந்து

வெளிப்பட்ட அக்கினி அவன் தவம் செய்த இடத்தில் தொடங்கி மூவுலகிற்கும் பரவி கொடூரமாக எரிய ஆரம்பித்தது. அத்தீயின் கொடுமையைத் தாங்கமுடியாத தேவர்கள் அலறியவாறு பிரம்மதேவரிடம் செல்ல அவர் தேவர்களை அழைத்துக் கொண்டு சிவபெருமானிடம் செல்ல சிவபெருமான் அவர்களை அழைத்துக் கொண்டு மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர்.



**தே**வர்களின் அவல நிலையை உணர்ந்த மகாவிஷ்ணு தேவர்களைக் காயாசுரன் தவம் செய்யும் இடத்திற்குச் செல்லுமாறு பணித்துவிட்டுக் கருடனை அழைத்து அதில் ஏறிக் காயாசுரன் தவம் செய்யுமிடத்தை அடைந்தார். காயாசுரன் மகாவிஷ்ணு வந்திருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி கொண்டு தனது கண்களைத் திறந்து மகாவிஷ்ணுவைப் பார்த்துக் கரங்கூப்பி வணங்கினான். “காயாசுரா, யாரும் செய்யாத இந்தக் கோரமான கடுந்தவத்தை நீ செய்யக் காரணம் என்ன. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்” என்றார்.



“**ப**கவானே, காணக்கிடைக்காத காட்சியை இன்று நான் கண்டமையால் பெருமகிழ்ச்சியடைந்தேன். தாங்கள் நேரில் வந்து எனக்குத் தரிசனம் தந்ததைவிடச் சிறந்த வரம் உலகில் எதுவும் இல்லை. அதனால் நான் உலகில் சிறந்த பவித்திரமுடையவனாக வேண்டும்” என்று கேட்க மகாவிஷ்ணு அவன் கேட்ட வரத்தை அருளிவிட்டு மறைந்துபோனார்.

**அ**ன்றுமுதல் காயாசுரன் புனிதமடைந்துவிட்டான். அதனால் அவனைக் கண்டவர்கள், தொட்டவர்கள், பேசியவர்கள் எல்லோரும் புனிதர்களாகிச் சொர்க்கத்தை அடைந்தனர். இதனால் யமனுக்கு தொழில் இல்லாது போனது. யமபுரி சூனியமாகி செயற்படாமல் முடங்கிவிட்டது. அதனால் பெரும்துயரம் கொண்ட யமதர்மராஜன் பிரம்மனிடம் சென்று தனக்கும், தனது லோகத்திற்கும் நேர்ந்த அவலத்தை எடுத்துரைத்தார். அதனால் பிரம்மதேவர் யமனை அழைத்துச் சென்று முறையிட்டார். அனைத்தையும் கேட்ட மகாவிஷ்ணு, “பிரம்மதேவரே, நீங்கள் ஒரு பவித்திரமான பெரிய யாகத்தைச் செய்யுங்கள். அதற்கு காயாசுரனின் உடலைத் தானமாகக் கேளுங்கள். அவனது உடல்



புனிதமானது, பௌத்திரமானது. யாககுண்டமாகப் பயன்படத்தக்களவு பெரியது. அதை மேடையாகப் பாவித்து யாகம் செய்தால் அவன் பெரும் புண்ணியவானாவான் என்று கூறுங்கள்" என்று சொல்லப் பிரம்மனும் யமனும் மகிழ்வுடன் அங்கிருந்து சென்றுவிட்டனர்.



**பி**ரம்மனும், யமனும், இந்திரன் முதலான தேவர்களும் ஒன்றாகச் சேர்ந்து காயாசுரனின் இருப்பிடத்திற்குச் சென்றனர். அவர்களைக் கண்ட காயாசுரன் மிக்க மகிழ்வுடன் வணங்கி அவர்களை வரவேற்றுத் தகுந்த ஆசனங்களில் அமர்த்திவிட்டு, "பெரும் பெரும் தேவர்களெல்லாம் சேர்ந்து அடியேனான என்னைக் காணவந்திருப்பது அதிசயமானது. பிரம்மதேவரே, உலகைப்படைக்கும் தாங்கள் தான் என்னையும் படைத்தீர்கள். அதனால் நீங்கள் எனது தந்தைக்கு நிகரானவர். நீங்கள் எதைக்கேட்டாலும் நான் இல்லை என்று சொல்லாது தருவேன். அதுபோல எதைச் செய்யச் சொன்னாலும் மகிழ்வுடன் உடனே செய்வேன். அதனால் வந்த விஷயத்தைத் தாமதியாது கூறுங்கள்" என்றான்.

"**கா**யாசுரா, நீ கடுமையான தவம் செய்து பகவானின் அருள் பெற்றதோடு பௌத்திரமான உடலையும் பெற்றுவிட்டாய். உலக நன்மைக்காக நாங்கள் ஒரு மகாயாகம் செய்ய விரும்புகிறோம். அதற்கு யாகமேடை அமைக்கத்தக்க புனிதமான உடல் உன்னுடையதுதான். உனது உடலைத் தவிரப் புனிதமான உடலைத் தேவர்கள்கூடப் பெற்றதில்லை. அதனால் விசாலமான பெரிய யாகமேடை அமைக்க உனது உடலை எமக்குத் தானமாகத் தரல் வேண்டும். அதனால் உனக்கும், உனது முன்னோர்க்கும் பெரும் புண்ணியம் கிடைக்கும்" என்றார் பிரம்மா.



"**பி**ரம்மதேவரே, எனது உடல் யாகத்திற்கு மேடையாகப் பயன்பட நான் பெரும் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். அத்துடன் எனது முன்னோரும் இதனால் பயனடைவர். அவர்களும் புனிதர்களாகிச் சொர்க்கத்தை அடைவர். எனது உடல் தங்களால் தோற்றுவிக்கப்பட்டது. அது விஷ்ணுவின் அருளால் புனிதமடைந்துவிட்டது. புனிதமடைந்த எனது உடல் உலக நன்மைக்காகப் பயன்படவிருப்பதை நினைத்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அதனால் எனது ஆத்மா புனிதமடைந்து சாந்தியடையும். அதை மனமுவந்து நான் தங்களுக்குத் தருகிறேன்" என்றான் காயாசுரன்.



**பெ**ரும் மகிழ்வடைந்த பிரம்மதேவரும், யமதர்மராஜனும் தாம் நினைத்தபடி பெரும் யாகத்தைச் செய்ய ஆரம்பித்தனர். காயாசுரன் பூமியில் மல்லாந்து படுத்து யாகமேடையானான். பிரம்மா காசியப முனிவரையும், வசிட்ட முனிவரையும் தலைமைவகிக்கும்படி கூற யாகம் ஆரம்பமானது. அக்கினி சர்மா என்ற முனிவர் பஞ்சாக்கினியை உண்டாக்கினார். அந்தணர்கள் வேதமோதச் சிறப்பாக யாகம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது காயாசுரனின் பருத்த அகலமான உடல் அசையத் தொடங்கியது. அதைக் கண்ட பிரம்மதேவர், யமதர்மராஜனை அழைத்து அவனிடம் உள்ள ஒரு சிலையைக் கொண்டு வந்து காயாசுரனின் தலையின் மீது வைக்குமாறு கூறினார். உடனே யமன் ஒரு சிலையை எடுத்துவந்து காயாசுரனின் தலையில் வைத்தபின்பும் அவனது உடல் அசைவதை நிறுத்தவில்லை. அதனால் பிரம்மதேவர் தேவர்களை அழைத்துக் காயாசுரனின் கால்களின் மீது ஏறி நிற்கும்படி கூறினார். அப்படியிருந்தும் காயாசுரனின் உடல் தொடர்ந்து அசைந்து கொண்டிருந்தமையால் பிரம்மதேவர் மகாவிஷ்ணுவிடம் சென்று காயாசுரனின் உடல் அசைவதைப்பற்றிக் கூறினார்.



**வி**ஷ்ணு யாகசாலைக்கு வந்தபோது காயாசுரனின் உடல் அசைந்து கொண்டிருந்தது. அதனால் தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்துத் தன்னைப்போல ஓர் உருவை உருவாக்கி அதை முன்பு வைத்த சிலையுடன் வைக்குமாறு கூறினார். அதனால் பௌத்திரமான காயாசுரனின் உடலில் மகாவிஷ்ணு அமர்ந்துவிட்ட தன்மை தோன்றக் காயாசுரனின் உடல் அசைவது நின்றுவிட்டது. இருப்பினும் அவன் வேதனையைத் தாங்கமுடியாது முனகினான். “என்னை ஏன் இவ்வாறு மிகக் கொடுமையாகத் துன்புறுத்துகிறீர்கள். விஷ்ணு அசைய வேண்டாம் என்று கூறியிருந்தால் நான் அசையாது படுத்திருப்பேன். தேவர்கள் அனைவரும் எனது காலில் ஏறி நின்றமையால் அவர்களது பாரத்தைத் தாங்கமுடியவில்லை. எனினும் நான் பெரும் புண்ணியவான். ஏனென்றால் விஷ்ணுவின் அருளான உருவத்தை நான் தாங்கியுள்ளேன். அது நான் பெற்ற பெரும் பாக்கியமாகும். ஏன் வாழ்நாள் முழுவதும் இவ்வாறு இருக்க அருள்செய்யுங்கள்” என்றான்.



**அ**தைக்கேட்ட மகாவிஷ்ணு, "காயாசுரா, உனது தியாகத்தைப் போன்றதொரு தியாகத்தை யாராலும் செய்யமுடியாது. நீ பெரும் புண்ணியவான். உனது பெயர் என்றும் நிலைத்திருக்கும். அதனால் நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்றார்.

"**ப**கவானே, பூமி சூரிய சந்திரர்கள், மும்மூர்த்திகள் உள்ளவரை இப்போது எனது உடலில் இருப்போம் அத்தனைபேரும் இருத்தல் வேண்டும். இந்தப் புனிதமான யாகம் செய்த இடம் என்றும் எனது பெயரில் காயாசேத்திரம் என்று பக்திசிரத்தையுடன் அழைக்கப்பட வேண்டும். மக்களின் நலனுக்காக இத் தீர்த்தத்தில் சகல புண்ணிய தீர்த்தங்களும் வந்து கலத்தல் வேசண்டும். இத்தீர்த்தத்தில் நீராடிய பின் தானம், தர்ப்பணம், சிரார்த்தம் செய்பவர்கள் மோட்சத்தை அடையவேண்டும். பித்ருக்கள் பிரமலோகம் சென்று இன்பமாக வாழவேண்டும். நைமிசம், புஷ்கரம், கங்கை, பிரயானை காசி முதலிய தீர்த்ததேச்சிரங்கள் யாவும் காயாதீர்த்த சேத்திரத்துடன் கலந்திருக்க வேண்டும்" என்று காயாசுரன் கேட்க மகாவிஷ்ணு அவன் கேட்ட வரங்கள் யாவற்றையும் அளித்தார்.

**அ**தன்பின் பிரம்மதேவர் பிராமணர்களுக்குப் பொன், பொருள், உணவு, பட்சணங்கள், கல்பகதரு, காமதேனு, வீடுகட்ட நிலம், அதற்குரிய பொருட்கள் முதலியவற்றைக் கொடுத்து இனிப் பிராமணர்கள் யாரிடமாவது யாசிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். மகாவிஷ்ணுவுக்குக் காயாசுரனின் மீது அளவுக்கதிகப் பிரியம் உண்டானதால் 'கதாகரன்' என்ற விசேடநாமத்துடன் காயாதீர்த்தத்தில் தங்கிவிட்டார்.

**அ**தன்பின் ஒரு சமயம் தர்மதேவன் செய்த யாகத்திற்குச் சென்ற பிராமணர்கள் தானமாகப் பொருட்களையும், தட்சணையையும் பெற்றுவிட்டனர். அதனால் மிக்க கோபங்கொண்ட பிரம்மதேவர் காயாசுரனை வைத்து யாகம் செய்தபோது கொடுத்த கல்பகதருவையும், காமதேனுவையும் திரும்பப் பெற்றுக் கொண்டார். அத்துடன் அவர்களின் பார்வைபட்ட நதிகள் வரண்டு காய்ந்துவிடும் என்றும் சாபமிட்டார். அதனால் வேதனைப்பட்ட பிராமணர்கள் பிரம்மதேவரிடம் மன்னிப்புக் கேட்டனர். அதனால் அவர்களை மன்னித்த பிரம்மதேவர், அவர்களைத் 'தீர்த்தோப ஜீவன்களாக' இருக்குமாறு கூறினார்.



**தீ**ர்த்தோப ஜீவன்களென்றால் புண்ணிய தீர்த்தங்களுக்கு வந்து சிரார்த்தக் கடமைகளை முடிப்போர் கொடுக்கும் தானங்களையும, தட்சணையையும் பெறுவதாகும். 'யாத்திரியர்கள் உங்களைப் பூசித்தால் அது என்னைப் பூசித்ததை ஒக்கும்' என்று பிராமணர்களுக்குப் பிரம்மதேவர் கூறினார்.

## 14. காயாசுரனின் தலைமீது சிலை



**சு**வேதவராக கல்பத்தில் தர்மமூர்த்தி என்றொரு மகான் தனது மனைவியான விஷ்வரூபையுடனும், மகளான தர்மவிரதையுடனும் செய்ய வேண்டிய தானதர்மங்களையெல்லாம் வழங்கியும், கிரியைகளை முறைப்படி செய்தும், விரதங்களை அனுஷ்டித்தும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார். ஒரே ஒரு மகளான தர்மவிரதைக்குப் பல இடங்களில் வரன் தேடியும் கிடைக்கவில்லை. நாளாக நாளாக வயது சென்றமையால் தர்மமூர்த்திக்குக் கவலை உண்டானது. அவர் தனது மகளை அழைத்துத் தவம் செய்யுமாறு கூற அவள் தவம் செய்து வந்தாள்.



**பி**ரம்மாவின் மானச புத்திரரான மரீசி முனிவர் ஒரு சமயம் அவள் தவம் செய்துகொண்டிருந்த இடத்திற்கு வந்தார். இளம் வயதில் அவள் துறவுபூண்டு கடுந்தவம் செய்வதைக் கண்டு அதிசயித்து அவளின் அருகில் வந்து, "பெண்ணே, நீ மிகவும் அழகாகவும், இளமையாகவும் இருக்கிறாய். இளம் வயதில் பெண்கள் தவம் செய்யாது திருமணம் செய்து தமது சந்ததியைப் பெருக்குவது தான் வழமையாக நடைபெறுவது. அதைவிட்டு வழமைக்கு மாறாகத் தவம் செய்கிறாய். அதற்கான காரணத்தை நான் அறியலாமா?" என்று கேட்டார்.

"**மு**னிவரே, நான் தர்மமூர்த்தி என்ற ஒரு மகானின் மகள். எனது தந்தை எல்லாவிதமான தானதர்மங்களையும் செய்பவர். முறைப்படி கிரியைகளையும், சடங்குகளையும் செய்பவர். விரதங்களை முறைப்படி அனுஷ்டிக்கும் ஒரு மேலான விஷ்ணுபக்தர். இருந்தும் பலகாலமாக எனக்குத் திருமணமாகாததால் மிக்க கவலை கொண்டு என்னைத் தவம் செய்யுமாறு கூறினார். அதனால் தான் நான் தவம் செய்கிறேன்" என்றாள்.

**த**ர்மவிரதையின் அழகும், அமைதியான பேச்சும் அவரைக் கவர்ந்தது. அதனால் அவர் அவளைத் திருமணம் செய்ய விரும்பி, "தர்மவிரதையே, உனது தந்தை பெரும் தர்மவான். நீ அவரது அழகான புத்திரி. எனது பெயர் மரீசி. நான் பிரம்மதேவரின் மானச புத்திரன். நீ விரும்பினால் உன்னை நான் திருமணம் செய்து இன்பமாக வாழவைப்பேன். அதனால் உனது விருப்பத்தைச் சொல்" என்றார்.

“முனிவரே, நான் எனது தந்தையின் சொற்களை வேதவாக்காக மதிப்பவள். அதனால் என்னால் உங்களுக்குப் பதில் சொல்ல முடியாது. எனது தந்தையிடம் சென்று பேசுங்கள். அவரது முடிவை நான் ஏற்றுக்கொள்வேன்” என்றாள்.

அதைக்கேட்ட மரீசி முனிவர் மிக்க மகிழ்வுடன் தர்மமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். முனிவரைக் கண்ட தர்மமூர்த்தி அவரை வணங்கி வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி அவருக்குச் சுவையான உண வகைகளைக் கொடுத்தார். அவற்றை உண்டபின் மரீசி முனிவர் தனது விருப்பத்தை வெளியிட்டார். மரீசி முனிவர் பிரம்மாவின் மானச புத்திரர் என்பதையும், அவரது கல்வி, பலம், திறமை யாவற்றையும் தெரிந்த தர்மமூர்த்தி அவரது விருப்பத்தை மிக்க மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். அதன்பின் இருவருக்கும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. அதன்பின் மரீசி முனிவர் தனது மனைவியான தர்மவிரதையை அழைத்துக் கொண்டு தனது ஆச்சிரமத்திற்கு வந்தார்.



ஒருநாள் அவர் படுத்திருக்க தர்மவிரதை அவரது பாதங்களை வருடிக்கொண்டிருந்தாள். அந்த சுகம் அவரை மெய்மறக்கச் செய்து உறக்கத்தில் ஆழ்த்திவிட்டது. அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது அவரின் தந்தையான பிரம்மதேவர் அங்கு வந்தார். அவரைக் கண்ட தர்மவிரதை தனது பணிவிடையை நிறுத்திவிட்டுப் பிரம்மதேவரை மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தாள். வருடல் நிறுத்தப்பட்டதால் விழித்தெழுந்த மரீசி முனிவர் தனது மனைவி தனக்குப் பிணிவிடை செய்வதை நிறுத்திவிட்டு வேறு எதையோ செய்யச் சென்றுவிட்டாள் என்று நினைத்தார். அவருக்குத் தனது தந்தையான பிரம்மதேவர் வந்திருப்பது தெரியாது அதனால் கோபங்கொண்டு தனது மனைவி சிலையாக மாறும்படி சபித்தார். அதை அறிந்து மிக்க கோபங்கொண்ட தர்மவிரதை மரீசி முனிவரிடம் வந்து, “உங்களது தந்தையான பிரம்மதேவர் வந்தமையால் தான் அவரை மதிப்பதற்காக எழுந்து சென்றேன். அவர் உங்களின் தகப்பன் மட்டுமல்ல படைக்கும் தெய்வம். வரமளிப்பவர் அவரது மகிமையை அறிந்துதான் முனிவர்களும், அசுரர்களும் அவரை நோக்கித் தவம் செய்து அரிய பல வரங்களைப் பெறுகின்றனர். அவரை விட மேலானவரா நீங்கள். அதைக் கூட உணரமுடியாத உங்களோடு வாழமுடியாது. உங்களுக்கான தண்டனையைப் பரமேஸ்வரன் தருவார்” என்று கூறிவிட்டுத் தீயைமூட்டி அதற்குள்ச் சென்று தவம் செய்தாள். அவள் சொன்னவற்றைக் கேட்ட மரீசி முனிவர் நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டார்.





**த**ர்மவிரதை தீயை மூட்டிவிட்டு அதனுள்ச் சென்று தவம் செய்ய ஆரம்பித்ததும் தீ உக்கிரமடைந்து மூவுலகிலும் பரவியது. அதனால் வெப்பத்தைத் தாங்க முடியாத தேவர்கள் பிரம்மதேவரிடம் சென்று முறையிட பிரம்மதேவர் அவர்களை அழைத்துக் கொண்டு மகாவிஷ்ணுவிடம் வந்து நடந்தவற்றைச் சொன்னார்.

**பி**ரம்மதேவர் சொன்னவற்றைக் கேட்ட விஷ்ணு தர்மவிரதைமுன் தோன்றினார். தர்மவிரதை அவரை வணங்கினாள், “தர்மவிரதையே, உனது தவத்தைக் கைவிட்டு விட்டு நீ விரும்பிய வரங்களைக் கேள்” என்று விஷ்ணு கூறினார்.

“**ப**கவானே, உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளாது என்னை மரீசி முனிவர் சபித்துவிட்டார். அச் சாபத்தை நீக்கியருளுங்கள்” என்றாள்.

“**த**ர்மவிரதையே, மரீசி முனிவர் தவ வலிமைமிக்கவர். அவரிட்ட சாபத்தை என்னால் நீக்கமுடியாது. அதனால் வேறு ஏதாவது வரத்தைக் கேள்” என்றார்.



“**ச**க்திமிகுந்த தெய்வமான உங்களால் கூட எனது சாபத்தை நீக்க முடியாதென்றால் நான் சிலையாவே இருக்கிறேன். நான் புனிதமானவள். இனி கங்கை போன்ற தீர்த்தங்களை விட நானே புனிதமானவளாக இருத்தல் வேண்டும். ரிஷிகளும், தேவர்களும், கடவுளர்களும் என்னுள் இருத்தல் வேண்டும். எனது சிலையைப் புனித தீர்த்தங்களில் நீராட்ட வேண்டும். அதன்பின் செய்யப்படும் தர்ப்பணம், சிரார்த்தம் என்பன பெரும் பலன்களைக் கொடுத்தல் வேண்டும். எனக்கருகில் தவம் செய்வோர் முத்தியடையவேண்டும்” என்று கேட்டாள்.

“**ப**திவிரதையே, உன் எண்ணங்கள் யாவும் சித்தியடையும். நீ யாகாசுரனின் தலைமீது என்றும் நிலைத்திருப்பாய். நான் எனது அம்சத்துடன் உன்னுள்க் கலந்திருப்பேன்” என்று அருளி மறைந்தார். இன்றும் காயாத் தீர்த்தத்தில் அந்தச் சிலைமீதுதான் பிண்டம் வைத்துக் கிரியைகள் செய்கிறார்கள்.

“**க**யாயாம் ஸ்ரீவிஷ்ணு பாதாதிஸமஸ்த தீர்த்தோர்ச்சவ தத்தம்” என்ற மந்திரத்தை உச்சரித்துத்தான் கிரியைகளைச் செய்கின்றனர். இதுவே காயாசுரனின் தலையின்மீது

வைக்கப்பட்ட தர்மவிரதையின் சிலையின் கதையாகும். இச்சிலையைப் பிரம்மாவின் கட்டளைப்படி யமதர்மன் வைத்திருப்பார்.

## 15. விஷ்ணு காயாவில் சுதாதராகத் தங்கல்



'**சு**துடன்' என்ற கொடிய அரக்கன் ஓயாது தேவலோகம் சென்று தேவர்களுடன் போர்தொடுத்து, அவர்களைக் கைது செய்து கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தான். பெரும் வேதனைகளை அனுபவித்த தேவர்கள் பிரம்மாவிடம் சென்று தங்களைக் காப்பாற்றுமாறு கேட்டனர். பிரம்மா தேவர்களை அழைத்துச் சென்று மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார். அதற்கு விஷ்ணு சொன்னார், "சுதுடன் இரும்பைப் போன்ற வஜ்ஜிரமயமான உடலைக் கொண்டவன். அத்துடன் காயாசுரன் போல என்மீது அதீத பக்தியும், தர்மசிந்தனையும் உடையவன். அதனால் அவனைத் தந்திரமான சூழ்ச்சியால்தான் வெல்லவேண்டும். அதற்காகப் பலம் மிகுந்த ஆயுதம் தேவை. அதை சுதுடனின் உடலில் இருந்து ஓர் எலும்பைப் பெற்றுச் செய்த ஆயுதத்தால் தான் அவனைக் கொல்லலாம்" என்றார்.



**அ**தைக்கேட்ட பிரம்மா சுதுடனிடம் சென்று தந்திரமாகப் பேசினார், "சுதுடா, நீ பெரும் விஷ்ணு பக்தன். அத்துடன் கடினமான இரும்பு போன்ற தேகத்தை உடையவன். விஷ்ணு பலம்மிக்க எதிரிகளை அழிக்கமுடியாது திண்டாடுவது உனக்குத் தெரியும். பெரும் விஷ்ணுபக்தனான நீ அவருக்கு உனது எலும்பு ஒன்றைத் தானமாகக் கொடுத்தால் அவர் மிகவும் மகிழ்ந்து உனக்கு அருள்வார். அத்துடன் உனது எலும்பால் செய்யப்படும் கதாயுதம் எப்பொழுதும் அவரது கையில் இருக்கும். அதனால் எப்பொழுதும் நீ அவரோடு கூட இருக்கும் பேற்றைப் பெறுவாய். அதனால் உனது உடலை விஷ்ணுவுக்குத் தானமாகக் கொடு அதனால் என்றென்றும் அவரோடு கூடியிருக்கும் பாக்கியத்தைப் பெறுவாய்" என்று பிரம்மா கூற சுதுடன் எப்போதும் விஷ்ணுவுடன் கூட இருக்கலாம் என்ற பிரம்மாவின் வார்த்தைகயைக் கேட்டு மிக்க மகிழ்ச்சிகொண்டு யோக சக்தியால் தனது உயிரைத் தனது உடலைவிட்டு அகற்றினான். அதைக்கண்ட பிரம்மதேவர் தேவருலகச் சிற்பியான விஷ்வகர்மாவை அழைத்து காயாசுரனின் எலும்பிலிருந்து ஒரு வஜ்யுராயுதம் செய்து தருமாறு கூற விஷ்வகர்மா சுதுடனின் எலும்புகளில் இருந்து ஒரு பலம்மிக்க கதாயுதத்தை உருவாக்கி அதை விஷ்ணுவிடம் கொடுத்தார்.

**மி**க்க மகிழ்வுடன் விஷ்வகர்மா கொடுத்த கதாயுதத்தைக் கொண்டு கொடிய அரக்கர்களை விஷ்ணு அழித்தார். அந்தக் கதையுடன் சென்ற விஷ்ணு அசைந்து கொண்டிருந்த காயாசுரனின் தலைமீது அமர்ந்ததாலே தான் காயாசுரனின் அசைவு நின்றது. இவ்வாறு தான் விஷ்ணு காயாதீர்த்தத்தில் கதாதரனாகக் காட்சி கொடுக்கிறார்.

## ௧௬. காயாசேத்திர மகிமை



**சே**த்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன புனிதமான திருக்கோவில்கள் எல்லாவற்றிலும் சிறப்புவாய்ந்தது காயாசேத்திரம். காயா சுரன் என்ற அரக்கன் மகாவிஷ்ணுவை நோக்கிப் பலகாலம் கடுமையான தவம் செய்தன். அவனது தவத்தின் வலிமையால் மகிழ்ந்த மகாவிஷ்ணு அவனின் முன்தோன்றி, “காயாசுரா, உனது கடுந்தவத்தைக் கண்டு மிக்க மகிழ்வடைந்தேன். அதனால் நீ விரும்பிய வரத்தைக் கேள்” என்றார்.

**ப**கவானை நேரிற்கண்டு மகிக் மகிழ்ச்சியடைந்த காயாசுரன், “பலம் மிக்க எனது உடல் புனிதத்தலமாக வேண்டும்” என்று கேட்டான். மகாவிஷ்ணு அவன் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

**வ**ரத்தைப் பெற்ற காயாசுரனின் ஆணவம் அதிகரித்தது. மூவுலகிலும் உள்ள அரசர்களையும், அசுரர்களையும் அடக்கினான். தேவர்களுடன் பெரும் போர் செய்து அவர்களை வென்று சிறையில் அடைத்தான். இந்திரன் அவனுக்குப் பயந்து தலைமறைவாகி விட்டான். அதனால் அவனது கொடுமைகள் பலமடங்காக அதிகரித்தன. தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். தேவ மகளிரை அடிமைப்படுத்தினான். இதனால் பெரும் துன்பமடைந்த தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர்.

**தே**வர்களின் முறைபாட்டை கேட்ட மகாவிஷ்ணு பிரமனை அழைத்து, “நீ, காயாசுரனிடம் சென்று ஒரு புனிதமான பெரிய யாகம் செய்யப் போவதாகவும் அதற்கு ஒரு புனிதமான உடல் தேவை என்று கூறி அவனது உடலைத் தானமாகக் கேள். அப்படித் தானமாகத் தருவதன் மூலம் அவன் பெரும் பலத்தை அடைவான் என்று கூறு” என்றார்.

**ம**காவிஷ்ணு சொன்னபடி பிரம்மன் காயாசுரனிடம் சென்று அவனை வணங்கி, “காயாசுரா, நான் ஒரு பெரிய யாகம் செய்யவுள்ளேன். அதற்கொரு புனிதமான தலத்தை ஒத்த உடல் வேண்டும். அவ்வுடல் உன்னைதவிர உலகில் வேறு யாரிடமும் இல்லை. நானும்

மகாவிஷ்ணுவும் சேர்ந்து செய்யும் பெரும் யாகத்திற்கு உனது புனிதத்தனமான உடலைத் தானமாகத் தா. அதனால் உனக்குப் பலமும், பெயரும், புகழும் ஏற்படும்” என்றார்.

**அ**தைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த காயாசுரன் தனது உடலைத் தானமாகப் பிரமனுக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டான். பிரம்மா அவனது மண்டை ஓட்டை எடுத்து அதை ஓம குண்டமாக்கி யாகத்தை முடித்தார். அப்போது விஷ்ணு அங்கு தோன்றி ஓமத்தை முடித்துவைக்குமாறு கூறினார். அப்போது காயாசுரனின் உடல் அசையத் தொடங்கியது. அப்போது மகாவிஷ்ணு தருமனுக்குச் சொன்னார், “எல்லாத் தேவர்களும் இந்தப் பாறையைப் பிடித்துக் கொள்ளுங்கள். தனது கதாயுதத்தின் சக்தியும், மற்றவர்களின் ஆயுதங்களின் சக்தியும், தெய்வசக்தியும் நிறைந்தது இப்பாறை” என்றார். தருமராஜனும் அப் பாறையைத் தனது இரு கைகளாலும் பற்றிப் பிடித்தான்.

**ஒ**ருநாள் மரீசி முனிவர் தனது மனைவியை அழைத்துத் தனது கால்களைப் பிடித்துவிடுமாறு கூறினார். மரீசி முனிவரின் மனைவி தருமவிரதை பயபக்தியுடன் முனிவரது கால்களை பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது பிரம்மன் மரீசி முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தான். அவனைக் கண்டதும் அவள் முனிவரின் கால்களைப் பிடித்துவிடுவதை நிறுத்திவிட்டு எழுந்து பிரம்மனை வரவேற்றான். அதனால் மிக்க கோபங்கொண்ட மரீசி முனிவர் தனது மனைவியைப் பார்த்து மிகுந்த சினங்கொண்டு, “கணவனின் பணிவிடையை நிறுத்திய நீ பாறையாகக் கடவாய்” என்று சபித்தார். அதனால் மிக்க வேதனைப்பட்ட தருமவிரதை மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் செய்தாள். அவளின் முன் மகாவிஷ்ணு தோன்றி, “முனி பத்தினியே, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்” என்றார்.

“**ப**கவானே, எனது கணவரின் சாபத்தால் நான் பாறையாக மாறிப் பலகாலமாகத் துன்பப்படுகிறேன். அதிலிருந்து என்னை மீட்டுவிடுங்கள்” என்றாள்.

“**மு**னி பத்தினியே, மரீசி முனிவர் தவ பலம் மிகவர். அதனால் அவரிட்ட சாபத்தை மாற்ற முடியாது. எனினும் முனிவரின் அணுக்கிரகம் உனக்குண்டு. அதனால் உன்னைக் கொண்டு காயாசுரனை உனது இருப்பிடத்தில் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறேன்” என்று கூறினார்.

“**ப**கவானே, அரியும், அரனும், அயனும், கௌரியும், லட்சுமியும் அப் பாறையின் மீது அமர்ந்திருக்கும் பேற்றினைக் கேட்டுப் பெற்றார்கள். அதில் அனைத்துத் தேவர்களினதும் சாந்நித்தியமும் இருக்குமாறு செய்யுங்கள்” என்றாள். அவ்வாறே விஷ்ணு செய்ய காயாசுரனின் அசைவு நின்றது.

**ஒ**ரு காலத்தில் சுரன் என்ற கொடிய அரக்கனை மகாவிஷ்ணு கொன்ற போது அவனது எலும்புகளை எடுத்துத்தே சிற்பியான விசுவகர்மா, கதாயுதம் ஒன்றைச் செய்து விஷ்ணுவுக்குக் கொடுத்திருந்தார். அதை ஏந்தியமையால் பகவானுக்குக் 'கதாதரர்' என்ற பெயர் ஏற்பட்டது. அப்போது மகாவிஷ்ணு கராதர மூர்த்தியாக மாறி பாறை மீது ஏறி அமர்ந்தார். அவர் அமர்ந்தவுடன் பாறை நகராமல் நின்றது.

**அ**தனால் வேதனைப்பட்ட காயாசுரன் தன்னைக் காப்பாற்றுமாறு விஷ்ணுவைக் கோர, அவர் சொன்னார், "காயாசுரா, உன்னை ஒரு புனித காரியத்திற்காகத்தான் நிலை நிறுத்தினோம். மும்மூர்த்திகளும் உன் அருகில் எப்போதும் இருப்பார்கள். யாத்திரீகர்கள், தலயாத்திரைக்குச் செல்லும் தலங்கள் எல்லாவற்றையும் விட இது மேலானது. இங்கு வந்து தரிசிப்போர் காலகதியில் என்னை வந்து அடைவார்கள்" என்று அருளினார்.



**அ**தன்பின் பிரம்மன் தான் செய்த யாகத்தை பூர்த்தி செய்துவிட்டு அந்தணர்களுக்குத் தானங்களை வழங்கினார். அப்போது தானம் பெறுவதற்காக அந்தணர்கள் முண்டியடித்தனர். அதைக் கண்ட விஷ்ணு, "பேராசை கொண்ட அந்தணர்கள் வசதிகள் இன்றித் திண்டாடுவர்". என்று சபித்தார். அதனால் மனம் வருந்திய பிராமணர்கள், பிரம்மாவை வணங்கி தமக்கிட்ட சாபத்தை மீளப்பெறுமாறு வேண்டினர். அதற்குப் பிரம்மா, "இங்கு வரும் யாத்திரிகர்கள் உங்களுக்கு வேண்டிய பொருட்களைத் தந்து உதவுவார்கள்" என்று அருளினார். அதனால் அந்த இடம் அன்று முதல் 'கயை' எனப் பெயர் பெற்றது.

## காயாசேத்திரத்தில் கர்மா செய்தல்



**கா**யாவுக்கு யாத்திரை செல்ல விரும்பும் யாத்திரிகர்கள் சாத்திரம் அறிந்தவர்களை அணுகி அவ் யாத்திரையின் விதிமுறைகளை அறிந்து, அவற்றை முறைப்படி செய்தே யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். விதிமுறைப்படி செய்யப்படாத யாத்திரை பலனளிக்காது. காயாவில் பல மூதாதையர்

தமது உறவினரின் வருகைக்காகக் காத்திருப்பர். தமது வம்சத்தில் பிறந்த யாராவது ஒருவர் சபைக்கு வந்து சிரார்த்தம் செய்து தம்மைக் கரைசேர்க்கமாட்டார்களா என்று எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

முத்தி பெறுவதற்குரிய நான்கு வழிகளை வேதம் அறியத் தந்துள்ளது. அவையாவன. பகவானின் மகிமையை அறிந்து அவரின் புகழ்பாடுவது, காயைக்குச் சென்று பிதுருக்களுக்குச் சிரார்த்தம் செய்து அவற்றைக் கரைசேர்ப்பது, மாட்டுத் தொழுவத்தில் மரணிப்பது, புனிதத் தலத்தில் வசிப்பது. இந்நான்கு வழிகளும் முத்திக்கு வழிவகுக்கும்.

இங்கு எப்போதும் பிதுர்களுக்கான கர்மாக்களைச் செய்யலாம். கரையை அடைந்து உத்தரமானசம் என்ற புனித நீரில் நீராடி, அதன் கரையில் பித்ருக்களுக்கும், தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும். அதன் பின் தெற்கே உள்ள தட்சினமான சத்தில் நீராடிவிட்டுச் சூரியனைப் பிரார்த்தித்து அவனின் அனுக்கிரகத்தைப் பெறவேண்டும்.



அதைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த காயாசுரன் தனது உடலைத் தானமாகப் பிரமனுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். பிரம்மா அவனது மண்டை ஓட்டை எடுத்து அதை ஓம குண்டமாக்கி யாகத்தை முடித்தார். அப்போது விஷ்ணு அங்கு தோன்றி ஓமத்தை முடித்துவைக்குமாறு கூறினார். அப்போது காயாசுரனின் உடல் அசையைத் தொடங்கியது. அப்போது மகாவிஷ்ணு தருமனுக்குச் சொன்னார், “எல்லாத் தேவர்களும் இந்தப்ட பாறையைப் பிடித்துக் கொள்ளுங்கள். தனது கதாயுதத்தின் சக்தியும், மற்றவர்களின் ஆயுதங்களின் சக்தியும், தெய்வசக்தியும் நிறைந்தது இப்பாறை” என்றார். தருமராஜனும் அப்பாறையைத் தனது இரு கைகளாலும் பற்றிப்பிடித்தான்.



ஒருநாள் மரீசி முனிவர் தனது மனைவியை அழைத்துத் தனது கால்களைப் பிடித்துவிடுமாறு கூறினார். மரீசி முனிவரின் மனைவி தருமவிரதை பயபக்தியுடன் முனிவரது கால்களை பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது பிரம்மன் மரீசி முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தான். அவனைக் கண்டதும் அவள் முனிவரின் கால்களைப் பிடித்துவிடுவதை நிறுத்திவிட்டு எழுந்து பிரம்மனை வரவேற்றாள். அதனால் மிக்க கோபங்கொண்ட மரீசி முனிவர் தனது மனைவியைப் பார்த்து

மிகுந்த சினங்கொண்டு, “கணவனின் பணிவிடையை நிறுத்திய நீ சிலையாகக் கடவாய்” என்று சபித்தார். அதனால் மிக்க வேதனைப்பட்ட தருமவிரதை மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் செய்தாள். அவளின் முன் தோன்றி, “முனிபத்தினியே, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்” என்றார்.

“பகவானே, எனது கணவரின் சாபத்தால் நான் சிலையாக மாறிப் பலகாலமாகத் துன்பப்படுகிறேன். அதிலிருந்து என்னை மீட்டுவிடுங்கள்” என்றாள்.

“முனிபத்தினியே, மரீசி முனிவர் தவபலம் மிக்கர். அதனால் அவரிட்ட சாபத்தை மாற்ற முடியாது. எனினும் முனிவரின் அணுக்கிரகம் உனக்குண்டு. அதனால் உன்னைக் கொண்டு காயாசுரனை உனது இருப்பிடத்திதல் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறேன்” என்று கூறினார்.

“பகவானே, அரியும், அரனும், அயனும், கௌரியும், லட்சுமியும் அப்பாறையின் மீது அமர்ந்திருக்கும் பேற்றினைக் கேட்டுப் பெற்றார்கள். அதில் அனைத்துத் தேவர்களினதும் சாந்நித்தியமும் இருக்குமாறு செய்யுங்கள்” என்றாள். அவ்வாறே விஷ்ணு செய்ய காயாசுரனின் அசைவு நின்றது.

ஒரு காலத்தில் சுரன் சென்ற கொடிய அரக்கனை மகாவிஷ்ணு கொன்றபோது எலும்புகளை எடுத்துதே சிற்பியான விசுவகர்மா கதாயுதம் ஒன்றைச் செய்து விஷ்ணுவுக்குக் கொடுத்திருந்தார். அதை ஏந்தியமையால் பகவானுக்குக் ‘கதாதரர்’ என்ற பெயர் ஏற்பட்டது.



இங்கு செல்பவர்கள் தலையில் உள்ள முடியை வழித்து அகற்ற வேண்டும். இந்த முடியை நீக்கும் இடத்திற்கு ‘முண்டப் பிரிஷ்டம்’ என்று பெயர். இதற்கு வடக்கே கங்கானம் என்ற புனித தீர்த்தம் உள்ளது. இங்கு நீராடிய பின்பு நாகார்யுணா என்ற நதியில் நீராட வேண்டும். அதன்பின் பாங்கு நதியில் நீராடி சிரார்த்தத்தைச் செய்து முடித்தல் வேண்டும். அதன்பின் கதாதரை வணங்க வேண்டும். அதன்பின்பு, மதங்க தீர்த்தம், பிரமகூபம் ஆகிய தீர்த்தங்களில் நீராடிவிட்டுக் கர்மாவைச் செய்தல் வேண்டும். அதன்பின் போதி விருட்சத்தைத் தரிசனம் செய்தல் வேண்டும்.

முதல்நாள் உத்தரமானது, இரண்டாம் நாள் தட்சணமானது, மூன்றாம் நாள் பிரம்மசரசரனது, நான்காவது நாள் பால் குந்தியில் நீராடிக் கர்மாக்களைச் செய்தல் வேண்டும்.

**எ**ன்பவற்றை எதிர்காலச் சமூகம் அறிந்து கொள்ள முடியும். அத்துடன் தீயவற்றைச் செய்பவன் வாழும் போது மகிழ்வுடனும், செல்வங்களுடனும் வாழ்ந்தாலும் தான் செய்த தீமைகளில் இருந்து தப்பமுடியாதென்ற தன்மையை விரிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

**அ**ஷ்டாதச புராணங்கள் என்ற பதினெட்டுப் புராணங்களையும் படித்தவர்கள், கேட்டவர்கள், பிரசங்கம் செய்தவர்கள் அனைவரும் எல்லாப் பாவங்களிலுமிருந்து விடுபட்டுப் பூமியில் சகல சௌகரியங்களுடன் வாழ்ந்துவிட்டு முத்தியடைந்து பேரின்பத்தை அனுபவிப்பர்.

**-முற்றும்-**